gistered No. M. 2330

SIDDHANTHAM
Vol. 27—No. 5

845

உ
சிவமயம்

845/2-54

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

ர் 27 | ஜய வைகாசி 1954 மே | இதழ் 5

உள்ளுறை

| | பக்கம் |
|---|---|
| துகள்தைக் கிழங்கை அகழ்ந்தெடுத்தல் ... | 161 |
| ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகரும் ... | 180 |
| " இலங்கு நூல் " ... | 187 |
| ...ருள் நம்பி காலத்தவர் ... | 189 |

18 JUN 1954

...லகப்பிரமணிய முதலியார், பி.ஏ., பி.எல்.
...யர் : புலவர் - முருகவேள், பி.ஓ.எல்.

...ந்தாந்த மகா சமாஜம்
...ரோட், இராயப்பேட்டை, சென்னை-14

JL
R673 ... N28
AU4 27.5
186901

## தேவாரம் அடங்கன் முறை

—மயிலைகிழார் இளமுருகனார் பதிப்பு

ஏழு திருமுறைகள், 8250 பாடல்கள், 1488 பக்கங்கள். இதில் 160 பக்கங்களில் 150 தலைப்புக்களில் பற்பல உட்பிரிவுகளில் 3000 பாட்டெண்குறிப்புக்களில் பல ஆராய்ச்சி நுட்பக் குறிப்புக்கள், பண்களுக்குரிய இசைக் குறிப்புக்கள், மூவர் சரித்திர நுட்பங்கள், மூவர் புகழ்ப்பாடல்கள், 274 பாடல்பெற்ற சிவஸ்தலங்களுக்குச் செல்லும் வழிவிவரங்கள், அத்தலங்களில் முக்கியமான சிலவற்றில் நடைபெறும் திருவிழாச் சிறப்புக்கள், முக்கியமான பல கல்வெட்டுக்கள், ஒவ்வொரு தலத்திற்கும் உரிய பாட்டெண்கள், தல முறைப் பதிப்பாக உபயோகித்தற்குரிய வசதிகள் எல்லாம் இவ்வெளியீட்டிலுள்ளன. ஒரே வால்யூமாக முழு கலிக்கோ பைண்டு செய்யப்பெற்ற பிரதி ஒன்றின் விலை ரூபா ஏழு, ரிஜிஸ்தர் தபாற்கூலி ரூ. 1-9-0. இரண்டு பாகமாக முழு கலிக்கோ பைண்டு செய்யப்பெற்ற பிரதி விலை ரூபா எட்டு, ரிஜிஸ்தர் தபாற்கூலி ரூ. 1-10-0. புத்தகவிலை தபாற்கூலி முழுமையும் மணியார்டர் மூலம் அனுப்பிப் புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளலாம். வி.பி., ரயில்வே பார்சல் முதலியன கிடையாது. விவரங்கட்கு ரிப்ளைகார்டு எழுதுக. மணியார்டர் அனுப்ப வேண்டிய விலாசம் :—திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார், 150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை—1.

**நாலாயிரதிவ்யப்ரபந்தம்** (மயிலை மாதவதாசன் இரண்டாம் பதிப்பு) விலை ரூபா மூன்று, ரிஜிஸ்தர் தபாற் கூலி ரூ. 1-2-0. வி. பி., ரயில்வே பார்சல் கிடையாது. மேலுள்ள விலாசத்திற்கே மணியார்டர் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

சிவமயம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு

மலர் 27 | ஐய வைகாசி 1954 மே | இதழ் 5

## அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுத்தல்*

*[பத்திராசிரியர்]*

திருச்சிற்றம்பலம்

தொடுக்கும் கடவுட் பழம்பாடல் தொடையின்பயனே, நறை பழுத்த துறைத்தீம் தமிழின் ஒழுகு நறுஞ்சுவையே, அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுக்கும் தொழும்பர் உளக் கோயிற்கேற்றும் விளக்கே, வளர்சிமய இமயப் பொருப்பில் விளையாடும் இளமென் பிடியே, எறிதரங்கம் உடுக்கும் புவனம் கடந்துநின்ற ஒருவன் திருவுள்ளத்தில் அழகு ஒழுக எழுதிப்பார்த்திருக்கும் உயிரோவியமே, மதுகரம் வாய் மடுக்கும் குழற்காடேந்தும் இளவஞ்சிக் கொடியே, வருகவே, மலையத்துவசன் பெற்ற பெருவாழ்வே வருக வருகவே.

அன்பும் அறிவும் ஆன்றோர் இணக்கமும் நிரம்ப உடைய பேரவைத் தலைவர் அவர்களே! தமிழ்த்தாயின் மணி வயிற்றில் என்னுடன் பிறந்த சகோதரி சகோதரர்களே! உங்கள் திருவடிகட்கு வணக்கம். அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுத்த பெரியார் வீற்றிருக்கும் இப் பேரவையில் அக்கிழங்கை அகழ்ந்தெடுத்தலைப் பற்றியே பேசுமாறு பணித்துள்ளீர்கள். அக்கிழங்கு இருக்கும் இடத்தைக்கூடத் தேடியறியாத யான், வெறுப்புமிக்க அதைப்பற்றி விருப்புமிக்க நன்முறையில் எவ்வாறு பேசுவ

*சைவ சித்தாந்த மகா சமாஜ 48-ம் ஆண்டு நிறைவு விழாவில் 25–12–53ல் நிகழ்த்திய சொற்பொழிவு.

தென்று நினைக்கிறேன். குற்றம் செய்யினும் குணம் எனக் கருதும் கொள்கை உங்களிடம் இருத்தலால், வேறெவ்வகையான அவையடக்கமும் கூருது தொடங்குகிறேன்.

2. அகந்தை யாதென்பதைப் பற்றி அதிகமான ஆராய்ச்சி தேவையில்லை. நம்மிற் பெரும்பான்மையோர் அதில் மூழ்கித்திளைக்கும் பேறு பெற்றுளோம். சிவஞான சித்தியார் சுபக்கத்து 2-ம் சூத்திரம் 59-ம் செய்யுள் இதைப் பற்றி விவரிக்கிறது. இதற்கு மாதவச் சிவஞான யோகிகள் கூறும் உரையுள் ஒரு சிறு பகுதியை மட்டும் உங்கள் நினைவிற்குக் கொண்டு வருகின்றேன். " அகங்கார தத்துவம் தோன்றி என்னோடொப்பார் இல்லை என அகந்தைப்படுதற்குக் காரணமாய்...யான் என்றும் எனதென்றும் அதன்கண் ஒருப்பட்டெழுந்து ஆன்மாவோடும் வேற்றுமையின்றி நிற்கும் " என்ற பகுதியே இனி ஆராய்தற்குரியது. இவ்வகந்தையின் வேதனையை வருணிக்கும் தாயுமான சுவாமிகள் " ஆங்காரமான குலவேடவெம்பேய்...அறிவினை மயக்கிடும், நடுஅறிய ஒட்டாது, யாதொன்று தொடினும் அது வாய்த் தாங்காது மொழி பேசும், அரிஹரப் பிரமாதி தம்மொடு சமானம் என்னும், தடையற்றதேரில் அஞ்சுரு ஆணிபோலவே தன்னில் அசையாது நிற்கும், ஈங்கார் எனக்கு நிகர் என்ன ப்ரதாபித்து, இராவண காரமாகி, இதயவெளி எங்கணும் தன்னரசு நாடு செய்திருக்கும், இதனோடெந்நேரமும், வாங்காவிலா அடிமை போராட முடியுமோ " என்கிறார். " ஆங்காரம் என்னும் மதயானை வாயில் கரும்பாய் " என்றும், " இப்பிறவி என்னும் ஓர் இருட்கடலின் மூழ்கி நான் என்னும் ஒரு மகரவாய்ப் பட்டு" என்றும் இப்பெரியார் பிறஇடங்களிற் கூறுவதையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளலாம். இவ்வாறு வெம்பேய், மதயானை, மகரமீன் என மூன்று உவமைகளால் இந்த ஆங்காரத்தின் கொடுமைகளை விளக்கும் தாயுமானார் செஞ்சொற்களை மனத்துட் கொண்டு, யான் எனதென்றும் என்னோடு ஒப்பார் இல்லையென்றும் அகந்தைப் படுதலின் உருவத்தைப் படம் பிடித்தாற்போலச் சூர பதுமனிடத்தில் காணலாம்.

3. முருகவேள் [illegible]ப்பெரு வடிவத்தைக் கண்குளிரக் காண்[illegible]. கோலமா மஞ்ஞை

186901



தன்னில் குலவிய குமரன் தன்னைப் பாலன் என்றிருந்தேன் ...மாலயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும் மூலகாரணமாய் நின்ற மூர்த்தி " என்றும், " சீர்க்குமரேசன் கொண்ட திருப்பெருவடிவம் தன்னில் ஏர்க்குறும் ஒளியும் சீரும் இளமையும் எழிலும் எல்லாம் ஆர்க்குள உலகில் அம்மா " என்றும், " ஆயிரகோடி காமர் அழகெலாம் திரண்டொன்றாகி மேயின எனினும் செவ்வேள் விமலமாம் சரணம் தன்னில் தூய நல் எழிலுக் " காற்றாதென்றும் பலவாறு புகழ்கின்றான். " சூழுதல் வேண்டும் தாள்கள், தொழுதிடல் வேண்டும் அங்கை, தாழுதல் வேண்டும் சென்னி, துதித்திடல் வேண்டும் தாலு, வாழுதல் வேண்டும் தீமை அகன்று நான் இவற்காளாகி " என்றும் எண்ணுகிறான். இந்த நிலையிலும் " தடுத்தது மானம் ஒன்றே " என்பது கந்தபுராணம். இவ்வகந்தைக் கிழங்கின் பெருமைதான் என்னே ! இது எவ்வாறு சூரபன்மனைத் தடுத்தது என்பதைக் கச்சியப்ப சிவாசாரியார் பின் வருமாறு விளக்குகிறார் :—

4. " ஒன்றொரு முதல்வனாகி உறைதருமூர்த்தி முன்னம்
நின்றமர்செய்தேன் இந்நாள் கெஞ்சினித் தளரேனம்மா !
நன்றிதோர் பெருமைபெற்றேன் வீரனும் நானேயானேன்
என்றும் இப்புகழேநிற்கும் இவ்வுடல் நிற்பதுண்டோ ",

" வானுளோர் சிறையைநீக்கி வள்ளலை வணங்கி இந்த
ஊனுலாம் உயிரைப்போற்றி அளியர்போல் உறவன்என்னில்
ஆனதோ எனக்கிதம்மா ! ஆயிரகோடி அண்டம்
போனதோர் புகழும் வீரத்தன்மையும் பொன்றிடாவோ !"

என்று கூறும்படியாகச் சூரபதுமனை அகந்தைக் கிழங்கு ஆட்டிப் படைக்கின்றது. சிறிது முன்பு வாயாரப் புகழ்ந்த திருப்பெரு வடிவினனைச் " சேயுரு அமைந்தகள்வன் செருவினை இழைக்கலாற்றான், மாயையின் ஒன்று காட்டி எனை இவண்மையல் செய்தான் " என்று வாய் கூசாது இகழவும் தூண்டுகின்றது !

5. இவ்வகந்தைக் கிழங்கு செழித்து ஓங்கி வளரும் இடங்கள் ஐந்து. இவை குலம், இளமை, கல்வி, செல்வம், அதிகாரம் என்பன. இவ்வைந்தும் மலபந்தத்தை வலியுறுத்தற்குரிய செருக்கின் காரணங்களாகவும், மலபந்தத்தைப்

போக்குதற்குரிய வாயில்களாகவும் தொழிற்படுகின்றன. "வாழ்வு எனும் மையல்விட்டு" எனத்தொடங்கும் சிவ ஞான சித்தியார் சுபக்கம் 2-ம் சூத்திரத்து 91-ம் செய்யு ளுக்குச் சிவஞான சுவாமிகள் கூறும் உரையில் "வாழ்வா வன : குலம், இளமை, கல்வி, செல்வம், அதிகாரம் என்னும் இவை. மையல் செருக்கு" என்பதை இனி ஆராய்வாம். இவை இருபாலும் கூர்மையுடைய ஆயுதங்கள் (Double edged weapons) என்பது இவற்றால் நன்மையும் தீமையும் விளைவதிலிருந்து நன்கு புலப்படும்.

6. இனி, இவைகளுள் ஒவ்வொன்றையும் பற்றிச் சிற்சில கருத்துக்களே ஆராய்தற்குரியன. விரிவான ஆராய்ச்சி இச்சொற்பொழிவின் சிறுகால அளவைக்குள் அடங்காது. இவ்வரிசையில் முதலாக நிற்பது குலம். "குலம் செய்யும் நன்மையும் உண்டோ? குல வேற்றுமை இந்த இருபதாம் நூற்றுண்டிலும் நமது இந்தியா தேசத்தில் தேவையோ?" என்று கூக்குரலிட்டு ஆரவாரம் செய்யும் இந்த நாளில், "குலம் செய்யும் நன்மை ஒன்றே உளது. அது நற்சார்பில் நம்மைப் பிறக்கவைப்பதே" என்று சிவ ஞான போதம் கூறுகின்றது. "தவம் செய்த நற்சார்பில் வந்துதித்து ஞானத்தை நண்ணுதலைக் கற்றுர் சூழ் சொல்லு மாம் கண்டு" என்று 8-ம் சூத்திரத்து முதல் அதிகரணத்து வெண்பா கூறுதற்கு "மீளத்தவம் செய்தற்குரிய உயர்ந்த குலத்தின் கண்வந்து தோன்றித், தவக்குறையான் அவ் விடயப்பற்று முறுகா வண்ணம் அறுத்துத், தத்துவஞானத் தைத் தலைப்படுவார் ஆதலை, வீட்டு நூல்களைக் கற்றுரது சூழ்ச்சி, அந்நூற் கருத்துணர்ந்து சொல்லும்" என்று சிவஞான சுவாமிகள் உரைவகுத்துள்ளார்.

7. இந்த நற்சார்பு (Good environment) ஒன்றே குலத்தை மலம் அறுக்கும் வாயில் ஆக்குகின்றது. பொது வாகப் பார்க்கும் இடத்துக் குலத்துக் கேற்ற கல்வி, அறிவு, ஒழுக்கம், குணம் முதலியன இருப்பதைக் குல நலமும் குல ஆசாரமும் மிகப் பெரிதும் குன்றியுள்ள இக்காலத்திலும் காணலாம். இதற்கு மாருக வுள்ள சிலர் ஒழுக்கம் முதலி யன (Exceptions prove the rule) எனும் முறையில் பெரும்பாலும் இவை இருப்பதையே வலியுறுத்தும். "குலத் தளவே ஆகுமாம் குணம்" என்ற நீதிநூல் வாக்கும் ஓரள



வில் இவ்வுண்மையையே வற்புறுத்துகின்றது. ஒவ்வொரு வனும் தனது சார்புக்கேற்ற முறையில் அமைகின்ருன். (Man is a creature of his environment) இந்த நற் சார்பு இல்லையெனில், குலத்தால் விளைவது தீமையே. "கல்லா ஒருவன் குலநலம் பேசுதல் நெல்லினுட் பிறந்த பதராகும்மே" என்பது நீதிமொழி. கல்லாமை ஒன்றே இம்மாதிரியான இழிவைத்தரும் என்ருல், உயர் குலத்தில் உதித்த அறிவிலிகள், குணமிலிகள், ஒழுக்கமிலிகள், முதலி யோர் நிலை என்னுகும்? இவர்கள் தமது குலத்தையே பாராட்டுவதால் பிறருக்கு என்ன நன்மை உண்டாகும்? இப்போலிப் பாராட்டைப் பாதுகாக்க அமைந்துள்ள ஒரு குலத்துக்கொரு நீதியின் கொடுமை, இன்னம் நமது நாட்டில் எவ்வளவு தீமையை விளைவிக்கிறது? "சாத்திரம் பல பேசும் சழக்கர்காள், கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்?" என்று அப்பர் பெருமான் அன்று கேட்ட கேள்வி இன்றும் கேட்கப்படுகின்றதே! "சாதி குலம் பிறப் பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும் ஆதமிலி" என்று வாத வூரடிகள் கூறியது இன்றும் பொருத்தமாகவே இருக் கின்றது. ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்தில், பண்டைக் குல மாகிய பிறந்த குலத்தைத் தவிர்ந்து, தொண்டக்குலமாகிய அடியார் இணக்கமே சிறந்த பேருகின்றது. 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்ற திருமூலர் திருவாக் கிலும் இத்தொண்டக் குலமே கூறப்படுகின்றது.

8. இவ்வாறு கொள்ளாமல், குலச் செருக்கால் விழுங் கப்பட்டு, மக்கள் செய்யும் கொடுமைகட்கு அளவேயில்லை. வீதிகள், கிணறுகள், குளங்கள், ஆற்றுத்துறைகள், கோயில்கள், திருமடங்கள், உணவுச்சாலைகள் முதலிய இடங்களில், அகந்தைக் கிழங்கின் அடிவேராகிய இக்குலச் செருக்கு படுத்தும் பாட்டைப், பல குல நலச் சட்டங்கள் தாண்டவம் புரியும் இந்நாளிலும் காணலாம். தொண்டக் குலத்து அன்பர் சிலர் ஓயாமல் பணி புரிந்து வருகின்றனர். சிறிது சிறிதாக அடிவேரும் தளர்ந்து அறுபட்டு வருகின்றது.

9. பெரிய புராணத்துள் பற்பல இடங்களில், அகந்தைக் கிழங்கு நமது கண் முன்பாகவே, அகழ்ந்து எடுக்கப்படுகின்றது. அந்தணரின் மேம்பட்ட அப்பூதி

அடிகளார், வேளாளர் குடிப்பிறந்த திருநாவுக்கரசு சுவாமிகட்குப் பாதபூசை செய்து, பாதோதக நீரை உட்கொண்டு பூரித்து, அவருடன் இருந்து சமபந்தி போஜனம் செய்தபோது ஒரு அகந்தைக் கிழங்கு அகழ்ந்தெடுக்கப்பெற்றது. திருநீலநக்க நாயனார் திருமாளிகையில், மூன்று தீ வளர்த்து அக்நிஹோத்ரம் செய்யும் இடத்தின் அருகில், திருநீலகண்டயாழ்ப்பாண நாயனார்க்கும் அவருடைய வாழ்க்கைத்துணைவியார்க்கும் பள்ளிகொள்வதற்கு இடம் கொடுத்தபோது மற்றொரு அகந்தைக் கிழங்கு அகழ்ந்தெடுக்கப்பட்டது. நம்மில் ஒவ்வொருவரும் இத்துறையில் நமது வாழ்க்கையில் முயற்சி செய்தல் வேண்டும். ஒத்த குணநலம் உடையவர்கள் எக்காரணம் கொண்டும் குலவேற்றுமை பாராட்டுதல் கூடாது. உயர்ந்த குணநலம் உடையவர்கள், தாழ்ந்த குலம் குணம் உடையவர்களிடம் கலந்து பழகி, அவர்கள் குண நலத்தை உயர்த்தவேண்டும். குறைந்த குண நலம் உடையவர்கள், உயர்ந்த குணநலமுடைய தாழ்ந்த குலத்தினரைத் தங்களைவிட மேலானவர்களாகவே எண்ணிப் பழகவேண்டும். இங்கு குலத்தில் உயர்வு தாழ்வு என்று யான் கூறுவது இக்காலத்திய பழக்க ஒழுக்கங்களை ஒட்டியதே யன்றி வேறல்ல. இத்துறையில் ஒல்லும் வழிகளிலெல்லாம் ஓயாதுழைத்து முழுவெற்றி பெற்றவர், இராயப்பேட்டையிலுள்ள இக் குகாநந்த நிலயத்தின் தாபகருள் ஒருவராயிருந்து, சில திங்கட்குமுன் சிவபதமடைந்த தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களாவார். இப்பெரியார் தமது வாழ்க்கைக் குறிப்புப் பெருநூலில், பற்பல இடங்களில் இதை விரித்துரைக்கின்றார். இவர் காட்டிய வழியில் நாமும் செல்ல முயற்சிப்போமாக.

10. இம்மட்டில் இதை நிறுத்தி, இனி கல்விச் செருக்கு ஆகிற அகந்தைக் கிழங்கைச் சிறிது ஆராய்வாம். பலதரப்பட்ட, பலதிறப்பட்ட அறிவுடைய புலவர்களுடைய நட்பு எனக்குக்கிடைத்திருக்கின்றது. அவர்களுட் சிலர், அழுக்காறுபற்றித் திருவள்ளுவர் கூறும் தீமைகட்கெல்லாம் உறைவிடங்கள் என்பது மிகை ஆகாது. குறைகளை அறிவது புலவர்கள் கடமை. இதுபற்றியே, புலவனுக்குத் "தோஷக்ஞன்" என்ற பெயரும் உண்டு. குறைகளை நீக்கிச் செம்மையான முறையில் புலமையை நடத்துவதே



குறைகளை அறிவதின் நோக்கம். சிலர் தங்களைத் தாங்களே புகழ்வதிலும், பிறர் தங்களைப் புகழும்போது காது குளிரக் கேட்பதிலும் பெருவிருப்புடையவர்கள். தமது முன்பு பிறரைக் குறைகூறும் இடத்தில், அவர்கட்கு உண்டாகும் இன்பத்திற்கு அளவே இல்லை. இவ்வாறெல்லாம் கல்விச் செருக்கு இவர்களை ஆட்டிவைக்கின்றது. தமது வாயினால் பிறரைச் சிறிதேனும் புகழ்வது, இவர்கள் கனவிலும் செய்யாத செயல். இவர்கள் நெஞ்சில் குடிகொண்டுள்ள அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுக்கும் ஆற்றல், தொல்ஆணைநல் ஆசிரியர்கட்கே உண்டு.

11. "சிவஞானசித்தியார்" எனும் சிறந்த ஞான சாத்திரத்தை அருளிச்செய்த சகலாகம பண்டிதர் உள்ளத்தில் கள்ளம் செய்த அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுத்து, அவரைக் குளிரக் கடாக்ஷித்து நல்வழிப்படுத்திய பெருமை மெய்கண்டாருக்கே உண்டு. நமது கல்விச் செருக்காகும் அகந்தைக் கிழங்கை நாமும் அகழ்ந்தெடுக்க முயற்சி செய்தல் வேண்டும். "தம்மினும் கற்றாரை நோக்கிக் கருத்தழிக எற்றே இவர்க்கு நாம் என்று" எனப்படும் முறையில் நாம் ஒழுகப் பழகுதல் வேண்டும். கற்றறிந்த பிறருடைய நன்மொழிகளை உபதேச மொழிகளாகக் கொள்ள வேண்டும். பிறரைக் குறைகூறுவதை ஒழிக்கவேண்டும். நம்மைப் பிறர் குறை கூறுவதை உவப்புடன் ஏற்று அக்குறைகளை நீக்கவேண்டும். பிறர் நலத்தைக் கூசாது எடுத்துரைக்கப் பழகவேண்டும். நமது நலத்தைப் பிறர் கூறும்போது, அதற்கு உவக்காமல் இருக்கவேண்டும். இம்மாதிரியான வழிகளில் முயன்றால், இக்கிழங்கின் அடிவேரும், சுற்றுவேர்களும் அகழ்ந்தெறியப்படும்.

12. கல்வியின் பயன் ஒழுக்கமும் அடக்கமும் ஆகும். பற்பல மேடைகளில் பேசுவதற்கு விரும்புதல், எல்லா இயக்கங்களிலும் தலையிடுவதற்கு முனைதல், முதலிய குற்றங்களைச் செய்யும் கற்றோர் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இதனால் உண்மையான உணர்ச்சி குன்றிக், குணக்கேடு நமது நாட்டில் வளர்கின்றது. அடக்கம் என்பது அறிவில்லாதவர்களின் அறிகுறி என்றுகூட எண்ணப்படுகின்றது. நான் சைவசித்தாந்த மகாசமாஜத்தின் காரியதரிசியாகப் பணிபுரிந்த காலத்தில், சமாஜ

ஆண்டுவிழாக்களில் தாம் சொற்பொழிவு நிகழ்த்தவேண்டும் என்று விண்ணப்பம் செய்தோர் தொகைக்கு அளவே இல்லை. ஓராண்டில் ஒருவிந்தையான விண்ணப்பம் வந்தது. வித்வான் பரீட்சையில் தேருது தோல்வியுற்ற ஒருவர், தேறியவர்கள் பள்ளிக்கூட ஆசிரியர்கள் ஆகி வயிறு வளர்க்க ஊதியம் பெற்றுத் தங்கள் உரிமைகளைப் பறி கொடுப்பவர்கள் என்றும், தேருத தம்போன்றவர்களே சுதந்தரத்துடன் நாடெங்கும் திரிந்து சமயப் பிரசாரம் செய்தற்குரியவர்கள் என்றும், இக்காரணம் பற்றித் தம்மை அவ்வாண்டு விழாவில் ஒரு சொற்பொழிவு நிகழ்த்த அமைக்கவேண்டும் என்றும், ஈதே இறைவன் திருஉள்ளக் கிடக்கை என்றும் எழுதினுர். அவரை நான் அழைக்க வில்லை. பரீட்சையில் தேருதவருக்கே இவ்வித தகுதியிருந்தால், தேறியவர்கள் என் சொல்வார்களோ அறிகிலேன்!

13. சிலர், உண்மைக்கு மாருன பல விபரீதமான கொள்கைகளை, வேண்டும் என்றே ஆங்காங்கு பிரசாரம் செய்து, அதனுல் செல்வாக்குப் பெற எண்ணுகின்றனர். இவர்கள் வாழ்வு சிலகாலம் செம்மையாயிருந்து, பிறகு மங்குவதையும் நாம் பார்க்கிறேம். கல்வியை மலபந்தம் அறுக்கும் வாயிலாகக் கொள்வதே இறைவன் திருவுள்ளம் என்பதை நாம் மறத்தல் கூடாது. “கற்றதனுல் ஆய பயன் என்கொல், வாலறிவன் நற்ருள் தொழார் எனின்” என்பது உலகப் பொதுமறை மொழி. நாம் கற்பதெல்லாம் பாசஞானத்தை அளிக்கும் கல்வியே. பதிஞானம் பெற்ருலொழிய உய்யும் நெறியில்லை. இதைத் தருபவன் இறைவனே. நூல் அடைந்த கொள்கையாலே திருஅடி கூடாது மாலடைந்த சனகாதி நால்வர்க்கு ஆலநிழற்பட்டன் சின் முத்திரை காட்டி அருள் செய்தான்.

14. புலவர்கள் தாம் கற்றதைப் பிறருக்குப் போதிக்க முன் வருதல்வேண்டும். தமது கல்வி தம்மோடு சாகும்படி சேமித்து வைக்கும் புலவர்கள், இக்காலத்தில் இல்லை என்றே நம்புகிறேன். வைத்தியம் முதலிய துறைகளில் இக்கொடுமை முன்பு இருந்தது. நல்ல புலவன் ஒருவன், பலசீடர்களைப் பழக்கி, அவர்கட்குத் தான் தோல்வியுற்று மகிழ்வதே பண்டைக்காலச் சிறப்பு. இராமாநுஜர் காலில் அவருடைய குருவாகிய பெரிய நம்பிகள் விழுந்து வணங்கின வரலாறு, தமிழ்நாட்டில் கேட்கப்படுகின்றது. நூல் வடிவில் தங்கள் கருத்துக்களை வெளியிட்டால், எதிர்ப்பும் கண்டனமும் தோன்றும் என்று அஞ்சிச், சிலர் எழுதாது இருக்கின்றனர். அவர்கள் கருத்துக்கள் பிறருக்குப் பயன் படாமற் போகின்றன. இது கல்விச் செருக்கின் சேட்டை களுள் ஒன்ருகும். உண்மையே வெல்லும் என்ற நம்பிக்கை புலவர்கட்கு இருத்தல்வேண்டும். உண்மையைக் காணும் முயற்சியில், தோல்வியும் புகழுக்கு இடம் என்பதை நாம் அறிவதில்லை. இதை மேல் நாட்டினர் நன்ருக அறிந்து, தங்கள் ஆராய்ச்சிகளைப் பலரும் அறிய, அவ்வப்போது வெளியிடுகின்றனர். வேற்று நாட்டவர் கூறுவது உண்மை யாயின், அதை அன்போடு வரவேற்கின்றனர். இதனுலன்ருே, Sir J. C. Bose, Sir P. C. Ray, Sir C. V. Raman முதலிய இந்தியப் பேரறிஞர்கள் உலகம் போற்றும் உண்மைகளை நிலைநாட்டிப் புகழ்பெற்றனர். நாம் உண்மை என்று நம்புவதை வெளியிடச் சிறிதும் கூசுதல் தகாது. கூசுவது அகந்தைக் கிழங்கின்பாற்படும்.

15. இனி, இளமையால் வரும் மையலைக் காண்போம். “தளையவிழ்கோதை நல்லார் தங்களோடின்பம் எய்த இளையனும் அல்லேன்” என்பது அப்பர் திருவாக்கு. “இளமை மீதூர இன்பத்துறையினில் எளியரானுர்” என்பர் சேக்கிழார். “சித்ரமாதர் அல்குற்படத்திற் கழுத்தில் பழுத்த செவ்வாயில் பணையில் உந்தித்தடத்தில் தனத்தில் கிடக்கும் வெம்காம சமுத்திரத்தின்” பரப்பினை அருணகிரிநாதர் திருவாக்கில் பல இடங்களில் காணலாம். “தையலார் மையலிலே தாழ்ந்துவிழக் கடவேனை” என்று வாதவூரடிகளும், “மடவார்தங்கள் வல்வினைப்பட்டு ஆழ முகந்த என்னை” என்று நம்பி ஆரூரரும், “மாதரார் கயற் கண் என்னும் வலையுட்பட்டழுந்துவேனை” என்று தொண்டரடிப் பொடியாழ்வாரும், தங்களை நொந்து கொள்கின்றனர். நீரிற்குமிழி இளமை எனினும், பலர் தங்களை என்றென்றும் இளையவர்களாகவே கருதி, இன்பத்துறையிலேயே ஆயுள்முழுமையும் கழிக்கின்றனர். இளமைதரும் மையலைநீக்கி, அதை மலபந்தம் அறுக்கும் வாயிலாகக் கொள்ளவேண்டும். இளமைதரும் உடல்நலம், உறுப்புக்களின் செழிப்பு முதலியவைகளை பலவகைத் தொண்டுகட்

குப் பயன்படுத்தவேண்டும். இப்போது நமது நாடுகளில் தொடங்கப் பெற்றுள்ள சமூகத்தொண்டுகளில் (Community Projects) நன்றாக உழைக்கவேண்டும். அறிஞர்கள் முதியோர் கல்வித்திட்டத்தில் ஆசிரியர்களாக உழைக்க வேண்டும்.

16. இனி, செல்வம் தரும் மையலை ஆராய்வாம். செல்வச் செருக்கு மிகமிகக் கொடியது. நீதிமன்றங்கள், சட்டசபைகள், தேர்தல்கள், திருக்கோயில்கள், திருமடங்கள், வேறு பலவகையான பொதுநிலையங்கள் முதலியவற்றில், செல்வச் செருக்கு தாண்டவம் புரிகின்றது. உண்மைக்கும் அறத்திற்கும் மாறான மறச்செயல்கள் பலவற்றைச் செய்யும்படி இச்செல்வச் செருக்கு தூண்டுகின்றது. "பொருள் அல்லவரைப் பொருளாகச் செய்யும், பொருள் அல்லது இல்லை பொருள்" என்று நயம்படக் கூறுவர் திருவள்ளுவர். "பணம் பந்தியிலே, குலம் குப்பையிலே" என்பது தமிழ்நாட்டுப் பழமொழி. புதுப்பணம் கண்டவர்கள் செய்யும் அட்டஹாஸத்திற்கு அளவேயில்லை. "Man proposes but money disposes" என்பது மேல் நாட்டு நாகரிக நடைமுறை. "கொல்வாரேனும் குணம்பல நன்மைகள் இல்லாரேனும் ஈபவர் ஆயிடில் எல்லாத் தீங்கையும் நீங்குவர்" என்று செல்வம் பறைசாற்றுகின்றது. "பணத்தைக் கொடுத்து சரிக்கட்டிவிடலாம், எதற்கும் அஞ்சவேண்டாம்" என்ற உபதேசம் சிறு சிறு கிராமங்களிலும் கேட்கப்படுகின்றது. பணத்தால் நேரும் கொடுமையை இழைத்தோ அல்லது அக்கொடுமைக்கு இரையாகியோ, நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர் இதன் மையல் வலையிற்படுகின்றனர். குலச்செருக்கு அகந்தைக் கிழங்கின் அடிவேராக இருந்தால், செல்வச்செருக்கு அதைவிடப் பருத்த ஆணிவேராகின்றது. இதைப் பிடுங்கியெறிய முறுகி எழுந்த ஐயடிகள் காடவர்கோன் நாயனார் "தஞ்சாக மூவுலகம் ஆண்டு தலையளித்திட், டெஞ்சாமை பெற்றிடினும் யான்வேண்டேன் – நஞ்சம், கரந்துண்ட கண்டர்தம் ஒற்றியூர்பற்றி, இரந்துண்டு இருக்கப்பெறின்" என்கிறார். "முசியாமல் இட்டுமிடிக்கின்றிலை" என்று அருணகிரிநாதரும், "செல்வம் என்னும் அல்லலிற் பிழைத்தும்" என்று வாதவூரடிகளும், "கம்பமதயானைக் கழுத்



தக்கத்தின் மேலிருந்து, இன்பமரும் செல்வமும் இவ்வரசும் யான்வேண்டேன்" என்று குலசேகராழ்வாரும், "கொள்ளென்று கிளர்ந்தெழுந்த பெருஞ்செல்வம் நெருப்பு" என்று நம்மாழ்வாரும், It is easier for a camel to pass thro' the eye of a needle than for a rich man to enter the Kingdom of God" என்று சிலுவைச் செல்வரும் கூறுகின்றனர். அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுத்த இப்பெரியார் பலருடைய திருவாக்கையும் பெருவாழ்க்கையையும் பின்பற்றி நாமும் நடப்போமாமாக.

17. இனி, மலம் அறுக்கும் வாயிலாகச் செல்வம் தொழிற்படுவதைச் சிறிது காணலாம். செல்வத்தைப் பழி அஞ்சி ஈட்டுதல் வேண்டும். ஈட்டிய பொருளைத் தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்ற முறையில் பங்கிடு செய்தல் வேண்டும். ஐயமும் பிச்சையும் ஆம்தனையும் கைகாட்டி வாழப்பழகுதல் வேண்டும். "இயல்வது கரவேல்", "ஐயம் இட்டு உண்", "மனனே கதிகேள் கரவாது இடுவாய்," "தானம் என்றும் இடுங்கோள்" "காக்கை கரவா கரைந் துண்ணும் ஆக்கமும் அன்ன நீரார்க்கே உள" என்பன போன்ற நீதிமொழிகள் ஆயிரக்கணக்கில் உள்ளன. பிறர் மெச்சுதற்காகவும், பட்டங்கள் பெறுதற்காகவும், வேறுதமக்கொரு நன்மை கிடைத்தற்காகவும், தரப்படுவன ஈகைகள் ஆகமாட்டா. இத்தகைய கொடையைக், "குறிஎதிர்ப்பை நீரதுடைத்து" என்று தள்ளினார் வள்ளுவனார். "Let not thine left hand know what thy right hand giveth" என்று ஒதுக்கினார் இயேசுவள்ளல்.

18. ஈகையுள் தலையாயது வறிஞன் செய்யும் ஈகையே "இலைபொருள் இல்லான் கொடையே கொடைப் பயன்" என்பது நாலடியார். "நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும், இல்லை என மாட்டார் இசைந்து." இதை இன்று ஊர் ஊராகச்சுற்றி, ஆசார்ய விநோபாவே நடத்திவரும் பூதானயக்ஞத்தில் கண்கூடாகக் காண்கின்றோம். பற்பல இடங்களில் மிக வறுமையான நிலையிலுள்ளவர்கள் செய்யும் கொடை அவ்வப்போது பத்திரிகைகளில் வெளியாகின்றது. வறுமை வந்தபோதும் இளையான் குடிமாற நாயனார் ஈகையை விடுத்திலர். பகல் விதைத்த செந்நெல் திருவமுதுக்கும், வீட்டுக்கூரை எரிகரும்பிற்கும், புன்செய்க்

குறும்பயிர் கறி யமுதிற்கும் உதவின. இக்குறும்பயிரினைப் "பாசப் பழிமுதல் பறிப்பார்போலப்" பறித்தனர் நாயனார். இதையே அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுத்தல் என்கிறார் குமரகுருபரர். இளையான் குடிமாறனாருக்கு முதலில் வறுமைப் பதம்புக உன்னினார் தில்லைமன்னினார். பிறகு குபேரனையே ஏவல் கொள்ளும் பதவியைத் தந்தார். மெய்யன்பர்களே! திருநீறணியும் உங்கட்கு இவ்வரலாற்றில் நம்பிக்கை உளதா? இல்லையா? உள்ளது என்றால், தானம் செய்யுங்கள். நம்பிக்கை இல்லை என்றால், "வெற்றுயிர்க்கு வீடு மிகை" என்பன் சிற்றம்பலம் மேய செல்வன். ஆகையால் அன்றறிவாம் என்னாது அறம் செய்க, நன்றே செய்க, இன்றே செய்க, இன்னே செய்க.

19. வறுமை நிலையினர் செய்யும் ஈகையை மேலே கண்டோம். செல்வ நிலையினர் செயல் என்ன? "வீடு வாசலாய், மாட கூடமாய் அணவளவு தவிடுமிகள் பிதிர விட மனம் இறுகி, ஆசையாளராய் ஊசிவாசியாய், அவியுறு சுடர்போலே, வெறு மிடியன் ஒரு தவசி அமுது படை எனும் அளவில், மேலை வீடுகேள் கீழை வீடுகேள், திடுதிடென நுழைவதன்முன், எதிர் முடுகி அவர்களொடு, சீறி ஞாளி போல் ஏறி வீழ்வதாய்" என்று அருணகிரியார் தீட்டியுள்ள ஓவியத்தைப் பாருங்கள். நாய் என்று வெளிப்படையாகக் கூறாமல் ஞாளி என்ற பட்டம் தருகிறார். இல்லையே என்னாத இயற்பகை, கார்கொண்ட கொடைக்கழறிற்றறிவார், பாரிவள்ளல் முதலியோருடைய சைவத்தமிழர் பரம்பரையில், நாமும் வந்துள்ளோம். "வேளாளர் என்றவர்கள் வள்ளன்மையால் மிக்கிருக்கும் தாளாளர் ஆக்கூரில் தான்தோன்றி மாடமே" என்று ஒரு குலத்தினரையே, தமது தேவாரத்தில் புகழ்கின்றார் திருஞான சம்பந்தர். இவர்கள் கொடைச் சிறப்பே, இப்புகழுக்குக் காரணம் ஆயிற்று. எனவே, செல்வர்களும், தங்கள் செல்வத்தில் ஒரு பகுதியை நல்ல வழிகளில் கொடையாகத் தரவேண்டும்.

20. வாழ்வு என்பதற்குச் சிவஞான சுவாமிகள் உரை கண்டவற்றுள் எஞ்சிநிற்பது அதிகாரம். இவ்வதிகாரம் விளைவிக்கும் மையல் மிக விசித்திரமானது. குலம் கல்வி இளமை செல்வம் ஆகிய நான்கும் இல்லாத ஒருவனுக்கு ஒரு சிறு அதிகாரம் கிடைத்துவிட்டால், அவன் படுத்துகிற



பாட்டை நேரில் அனுபவித்தவர்களே அறிவர். சில கிராமங்களில், கிராம முன்சீபும் கர்ணமும் படுத்துகிறபாடு, ரெவன்யூ இன்ஸ்பெக்டர் போலீஸ் இன்ஸ்பெக்டர்செலுத்துகிற செங்கோல், சில மட்டரக அதிகாரிகளின் களியாட்டம் முதலியன நேரிற் பார்த்து ஆராய்தற்குரியன. "Tin gods dressed in brief authority" என்று இத்தகையோரை ஆங்கிலத்தில் கூறுவதுண்டு. சில அதிகாரிகள் தவறான வழிகளிற் செல்லும்போது, அவர்களைத் தண்டிக்கிற செய்திகள் அவ்வப்போது பத்திரிகைகளில் வெளியாகின்றன. குற்றம் செய்வோர் அனைவரும் தண்டிக்கப்படும் காலம் வந்தால், மக்கள் அரசாங்கத்தில் முழுநம்பிக்கை வைக்கும் காலமும் வரும். அதுவரையில் மந்திரிகள் ஒருவரை ஒருவர் புகழும் கூட்ட நிகழ்ச்சிகளே பத்திரிகைகளில் காட்சியளிக்கும்.

21. சைவ மரபில் வந்த மாணிக்கவாசகர், குலச்சிறை நாயனார், சேக்கிழார் ஆகிய மூன்று அமைச்சர்கள் வரலாறு தமிழ் மக்கட்குக் கிடைத்துள்ளது. அப்பெரியார்கள் சென்ற வழியிற் செல்லுதற்கு இக்காலத்திய அமைச்சர்கள் முன் வருதல் வேண்டும். குடிமக்கட்கு அவர்களைப்போலவே, பற்பல நன்மைகள் செய்தல்வேண்டும். அரசனைத் திருத்திச் செம்மையான தெய்வீக நெறியிற் செலுத்திய பெருமை இவ்வமைச்சர் மூவருக்கும் உண்டு. அதிகாரத்தை நல்வழிப் படுத்திக் குடிகட்குப் புரைதீர்ந்த நன்மை செய்து, செருக்கை ஒழித்து, மலம் அறுக்கும் வாயிலாக அதிகாரத்தை நிர்வகிக்குமாறு எல்லாப் படிகளிலும் அமர்ந்துள்ள எல்லா அதிகாரிகளும், இன்றுமுதல் கடவுள் சாட்சியாக முயற்சிக்க வேண்டும்.

22. மேற் கூறிய ஐவகையான மையல்களை விளைவிப்பது ஒன்றே. எல்லா விதமான தீமைகட்கும் காரணமான ஆணவமலம் என்பதே அதன் பெயர். அதைப்பற்றி மிகத் தெளிவாகக் கூறும் தகுதி, யாருக்குண்டு? ஆணவத்தின் பேருருவாய் நின்று, மெய்கண்டாரால், அவ்வாணவத்தின் தீமை தீர்க்கப் பெற்ற அருணந்தி சிவாசாரியாருக்கே அத்தகுதியுண்டு. அவர் சிவஞான சித்தியார் சுபக்கம் 2-ம் சூத்திரம் 80-ம் செய்யுளிற் கூறுகிறார் :—

"ஒன்றதாய் அநேகசக்தி உடையதாய் உடனாய்ஆதி
அன்றதாய் ஆன்மாவின்தன் அறிவோடு தொழிலைஆர்த்து
நின்று போத்திருவத்தை நிகழ்த்திச் செம்பினிற்களிம்பேய்ந்து
என்றும் அஞ்ஞானம்காட்டும் ஆணவம்இயைந்து நின்றே."

இதைப்பற்றிய பல கருத்துக்களைச் சிவஞான சித்தியார் உரையிலும் சிவஞான போதத்தின் சிற்றுரை பேருரைகளிலும் காணலாம். இது மாயையின் வேறு, ஞானத்தின் அபாவம் அன்று, கேவல நிலையில் அறியாமையைச் செய்தலே இதன் தன்னியல்பு, சகல நிலையில் விபரீத உணர்வைச் செய்தல் இதன் பொது இயல்பு, வியாபக உயிர் அணுத் தன்மைப் படுமாறு செய்தலின் இது ஆணவம் என்னும் பெயர் பெற்றது, உயிர்கள்தோறும் தனித்தனி வெவ்வேறாய் மறைத்து நின்று, தத்தம் கால எல்லையில் நீங்குவனவாகிய சக்திகள் பல பல உடைத்தாய், உயிர்கள் மூன்றவத்தைகளும் படுதற்கு மூலகாரணமாய், நித்தமாய் வியாபகமாய் இருப்பது என்பது போன்ற பல நுண்ணிய கருத்துக்களை நாம் ஞாபகத்துள் வைத்துக்கொண்டால் ஆணவத்தைப் பற்றி ஒரு சிறிது அறிந்தவர்கள் ஆவோம். இருபது ஆண்டுகட்கு முன்பிருந்த Superintending Engineer திரு. பா. வே. மாணிக்க நாய்க்கரவர்கள் "மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு" என்றொரு சிறுநூல் வெளியிட்டார்கள். அதில் ஆணவ மலத்தின் இயல்புகள் பல மிக அழகாக வருணிக்கப்பெற்றுள்ளன. அவற்றுள் ஒன்று ஆணவத்திற்கு இன்மை கூறுது உண்மை கூறும் சைவ சித்தாந்தக் கொள்கை.

23. ஒரு காரியம் தவறு என்று தெரிந்த பிறகும் அதைச் செய்வது இக்கொள்கைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். ஞானத்தின் அபாவம் என்பதே ஆணவம் எனப்பட்டால், ஞானம் பெற்ற பிறகும் தவறு செய்வது பொருந்தாது. மேலை நாட்டு Psychology எனும் உளநுட்பஆராய்ச்சியில் இது Instinct of self assertion எனும் உள நெகிழ்ச்சியின் பாற்படும். இந்த ஆணவம் ஆன்மாவின் இயற்கை அல்ல. இயற்கை ஆயின் என்றும் நீங்காது. பாலின் வெள்ளை நிறமும், களாப்பழத்தின் கறுப்பு நிறமும் இயற்கையாதலின் என்றும் நீங்க மாட்டா. இந்த உவமையை



நூலாசிரியர்கள் கூறுவதுண்டு. ஆணவத்தை அநாதி சேர்க்கைப் பொருள் என்பது சைவ சித்தாந்தம். இந்த உடல் உள்ள அளவும் ஆணவம் உயிரைப்பற்றி இருக்கும். ஜீவன் முக்தர்கள் ஆகிய ஞானிகளிடத்தில் இது மாயாது தனது சக்தி மாய்ந்திருக்கும். இந்த நிலையில் இதற்கு வாசனா மலம் என்று பெயர். பெருங்காயக் குடுக்கையில் பெருங்காயம் முழுமையும் தீர்ந்த பிறகும், அதின் வாசனை விடாதிருப்பது என்ற உவமை இதை விளக்கும். இந்த ஆணவம் அநாதியாதலின் இது முக்தான்மாக்களிடத்திலும் இருக்கும் என்று சிலர் கூறுவதுண்டு. இது தவறு என்பதைச் சிவஞான சுவாமிகள் சித்தியார் 11-ம் சூத்திரம், 5, 6-ம் செய்யுள் உரைகளில் நன்றாக விளக்குகிறார். முக்தான்மாக்களிடத்தில் திருவடிப் பேற்றினில் மூன்று மலங்களும் பற்றறக் கழிந்து ஒழிந்து விடுகின்றன. இதனால் இவைகள் அநாதிநித்யப் பொருள்களாயிருத்தலுக்கு இழுக்கேயில்லை. ஏனென்றால் இவை முத்தியடையாத கோடிகோடி ஆன்மாக்களிடத்தில் நிலை பெற்றுள்ளன.

24. இந்த ஆணவ மலத்திற்கு மாயாமலம், கன்ம மலம் என்ற இரண்டு நண்பர்கள் உண்டு. இம்மூவரையும் இவர்கள் தொழிலையும், ஒரு நெல்லின் பகுதிகளில் வைத்துச் சிவஞான சித்தியார் (2 – 86) உவமை காட்டுகின்றது. நெல்லில் நான்கு கூறுகள் உள்ளன. அவை அரிசி, உமி, தவிடு, முளை என்பன. அரிசி உயிராகிய ஆன்மாவிற்கு உவமை. அரிசி, தவிடு, முளை ஆகிய மூன்றையும், உமியானது தன்னுள் வைத்து மறைத்திருத்தல் போல, உயிர் மாயை கன்மம் ஆகிய மூன்றையும் தன்னுள் மறைத்திருப்பது ஆணவம். அரிசியின் சொரூபம் தெரிய வொட்டாமல், அதனை முழுவதும் உமி மறைத்திருப்பது போலவே, ஆன்மாவின் சொரூபம் தெரிய வொட்டாமல் அதனை முழுவதும் ஆணவம் மறைக்கும். தவிடானது அரிசியைச் சிறிது விளக்கிச் சிறிது மறைப்பது போலவே, ஆன்ம அறிவைச் சிறிது விளக்கி, ஏகதேச அறிவாகிய மயக்கத்தையும் செய்வது மாயையின் தொழிலாகும். முளை என்பது அரிசியின் நுனியில் உள்ள ஒரு சிறு பகுதி. நெல்லில் இப்பகுதி சரியான நிலையில் இல்லாவிட்டால் அந்த நெல் முளைக்காது. கன்ம மலத்திற்கு உவமையாக உள்ளது இந்த முளை. முளை தோன்றுகி

18691

போது அரிசியின் சொரூபம் விளங்காதிருப்பது போலவே, கன்மமாகிய நல்வினையும் தீவினையும் செய்யப்படுகிறபோது, ஆன்மா அவ்விருவினையிலே மயங்கி நிற்றலால், தனது, உண்மை நிலையை அறியாதிருக்கும். ஆன்மாவின் உண்மை நிலை எல்லாம் அறிதலும் எல்லாம் செய்தலுமாம்.

25. கன்மமலம், மாயாமலம், ஆணவமலம் ஆகிய மூன்றையும், உயிரினுடைய சுகதுக்க நுகர்ச்சிகட்கு முறையே முதற்காரணம் துணைக்காரணம் நிமித்தகாரணம் என்பது மற்றொரு சைவ சித்தாந்த நுட்பம். நெல்லினிடத்துள்ள முளையை, முளைத்தற் சத்தியானது தோற்றுவித்தல் போல, உயிரினிடத்தில் சுக துக்கங்களைக் கன்மமலம் முதற் காரணமாய் நின்று தோற்றுவிக்கும். முளைத்தற்கு அநுகூலம்செய்து உடன்நிற்கும் தவிடுபோல, அச்சுக துக்கங்கள் அங்கு தோன்றுதற்குத் துணைக்காரணமாய்த் தனது காரியமாகிய தனுகரணம் முதலியவற்றையும், உயிரையும் இயைவித்து நிற்பது மாயாமலத்தின் தொழில். அச் சுக துக்கங்கள் அங்கு தோன்றுதற்கு நிமித்தகாரணமாய் அவற்றை முறுகுவித்து நின்று, அச் சுகதுக்கங்களை உயிர் நுகருமாறு நிலைபெறுத்தலாகிய தொழிலைச் செய்வது ஆணவமலம். முளைதோன்றுதற்கு உமி நிமித்தகாரணம் என்ற உவமை இதற்குப் பொருந்தும். ஆகவே, இந்தநெல் உவமை பந்தத்திற்கும், பந்தத்தின் காரணமாதற்கும் இம் மும் மலங்கட்கும் பொருந்தும்.

26. இந்த மும்மலங்களும் பந்தங்கள் ஆயினும், இவற்றுள் மற்றொரு நுட்பமான பாகுபாடும் உண்டு. ஆணவம் நேரே எதிரியாக நின்று பந்தம் செய்வதால் இதைப் பிரதிபந்தம் என்பர். மாயாமலம் உயிருக்கு உடம்பின் மூலம் சிறிது விளக்கம் செய்தலால் இதைச் சம்பந்தம் அல்லது நல்லபந்தம் என்பர். இதனாலேதான் "மாயாதனுவிளக்க" என்றார் மெய்கண்டார். தனுகரணாதிகளைப் பெற்றபின்பு, அவற்றை ஒட்டிவரும் பந்தம் ஆதலால் கன்மமலம் அநுபந்தம் எனப்படும். அநுபந்தம் என்றால் பின்சேர்க்கை என்பதை, வாரப்பத்திரிகை மாதப்பத்திரிகைகளை வாசிப்பவர்கள் நன்றாக அறிவார்கள். இத்தகைய பற்பல நுட்பமான கருத்துக்களை யறிவிக்கும் நெல் உவமை கூறும் செய்யுளை இனிக் காணலாம்.



"மும்மலம் நெல்லினுக்கு முளையொடு தவிடுமிப்போல்
மம்மர்செய்து அணுவின் உண்மைவடிவினை மறைத்துநின்று
பொய்ம்மைசெய் போகபந்தபோத் திருத்துவங்கள் பண்ணும்
இம்மலம் மூன்றினோடும் இருமலம் இசைப்பன் இன்னும்" (2–86)

27. இந்த ஆணவமலம் இருளைவிட மிகக் கொடியது. இருளானது பிறபொருள்களைக் காட்டாவிடினும் தன்னைக் காட்டும். ஆணவம் தன்னையும் காட்டாது, தான்மறைத்து வைத்திருக்கும் ஆன்மாவையும் காட்டாது, கடவுளையும் காட்டாது. எல்லா ஆன்மாக்களிடத்திலும் பொருந்தியிருந்தும், ஒருவருக்காவது இது தன்னைக் காட்டுவதில்லை. இக் கருத்தை மிக அழகாக "பலரைப் புணர்ந்தும் இருட்பாவைக் குண்டென்றும் கணவற்கும் தோன்றாத கற்பு" என்று உமாபதிசிவம் கூறுவர். இவ்வாறு வெளித்தோற்றம் அளிக்காமல், மறைந்திருத்தலை ஒருகாரணமாக வைத்தே அகந்தையைக் கிழங்கு என்றார் குமரகுருபர அடிகள். ஏனைய இருமலங்களையும் தன்னுள் அடக்கிய மூலமலம் ஆதலால் மூலமலம் அல்லது கிழங்கு மலம் அல்லது அகந்தைக் கிழங்கு என்பது மேலும் பொருந்தும். தளிர், பூ, காய், கறி, பழம் போலக்கிழங்கு சூரிய ஒளியைப் பெறுவதில்லை. ஆணவமும் இறைவன் ஒளியைப் பெறுவதில்லை.

28. சிறு விதைகளிலிருந்து பெருமரங்கள் வெளிவருவது போலப் பெரிய கிழங்குகளிலிருந்து வருவதில்லை. "தெள்ளிய ஆலின் சிறுபழத்தொருவிதை, தெண்ணீர் கயத்துச் சிறுமீன் சினையினும், நுண்ணிதே ஆயினும் அண்ணல்யானை, அணி தேர்ப்புரவி ஆட்பெரும் படையொடு, மன்னர்க்கிருக்க நிழல் ஆகும்மே". நான்கு வீசை எடையுள்ள ஒரு கிழங்கிலிருந்து இரண்டடி உயரமுள்ள சிறு செடியே தோன்றும். எங்கணும் வியாபித்திருக்கும் அகந்தைக் கிழங்கால் நன்மை விளைவதேயில்லை, தீமையே விளைகின்றது. ஆணவம் நம்மோடு அத்துவிதமாகக் கலந்திருக்கிறது. "ஆணவத்தோ டத்துவிதம் ஆனபடி மெய்ஞ்ஞான தாணுவினோ டத்துவிதம் சாரும் நாள் எந்நாளோ?" என்கிறார் தாயுமானார். "நான் ஆர் என் உள்ளம் ஆர் ஞானங்கள் ஆர் என்னை யார் அறிவார்" என்று கேட்டார் மாணிக்கவாசகர். பட்டினத்துப் பிள்ளையார், "இன்னது

யான் என்றறியேன் என்னை எதினும் தேடினன் யாதினும் காணேன் " என்று கூறிப் பிறகு, " மங்கைபங்க கங்கை நாயக நின்தெய்வத் திருவருள் கைவந்து கிடைத்தலின், மாயப்படலங்கீறித் தூயஞான நாட்டம் பெற்றபின் யானும், நின் பெருந்தன்மையும் கண்டேன் பிறரையும் கண்டேன் நின் நிலையனைத்தையும் கண்டேன் " என்று உபாயமாகிய வழியையும் குறிக்கிறார்.

29. ஒருகிழங்கைப் பிடுங்கி எறியக் கடப்பாறை, மண்வெட்டி, அரிவாள் முதலியன தேவை. கடப்பாறையால் பள்ளமகழ்தல், மண்வெட்டியால் மண்ணை அப்புறப்படுத்தல், அரிவாளால் கிழங்கைச் சூழ்ந்திருக்கும் வேர், கொடி முதலியவைகளை அறுத்தல் முதலிய காரியங்களைச் செய்தால் கிழங்கை எடுக்கலாம். அகந்தைக் கிழங்கு நமது உயிரைக் கவ்விக்கொண்டிருக்கிறது. இதை அகழ்தெடுக்கப் பல காரியங்கள் செய்தல்வேண்டும். இக்காரியங்களைத் தொகைவகை செய்து, இவைகளைப் பத்து என்று தீர்மானித்தார்கள் அகந்தைக் கிழங்கை அகழ்ந்த தொழும்பர்கள். சைவ சாத்திரப்பரிபாஷையில் இவை " தசகாரியங்கள் " எனப்படும். இவற்றின் விரிவான ஆராய்ச்சியை உமாபதிசிவம் " உண்மை நெறிவிளக்கம் " என்ற நூலிற் செய்துள்ளார். அப்பர் சுவாமிகளும் விடந்தீர்த்த பதிகத்து இறுதியடியில் "பத்துக்கொலாம் அடியார் செய்கைதானே " என்று இந்த தசகாரியத்தையே குறிக்கிறார்.

30. ஆணவமலம் அறிவற்ற ஜடப் பொருள். இதைத் தொழிற்படுத்துவது சிவசக்தியின் செயல். இது மலத்தோடு சம்பந்தப்பட்டுத் தொழில் புரிவதால், இதைத் திரோதான சக்தியென்றும் திரோதாயி மலம் என்றும் கூறுவதுண்டு. இச்சக்தியினால் ஆணவம் ஆடல்புரிவதையே, வாதவூரடிகள் " யான் எனதென்று அவரவரைக் கூத்தாட்டுவானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே " என்கிறார். ஆணவத்தின் ஆடலை நிறுத்திவிடுதற்கு ஆட்டி வைக்கிறவனைப் பிடிக்கவேண்டும். எனவே, ஆணவத்தினுடைய " வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க " என்றோதி, அவ்வேந்தன் திருவடிகளைப் பற்றுவதே உபாயம். ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்திலும் " எம்பெருமானே



உபாயம், தீர்க்கசரணாகதியாகிய ப்ரபத்தியே மார்க்கம் " என்று கூறுவதை நோக்குக. " பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப், பற்றுக பற்று விடற்கு " என்பது உலகப் பொதுமறை. பற்றற்றான் பற்று, ஆணவத்தை ஆட்டுவிக்கும் திரோதான சக்தியை, இந்த ஆணவத்தை அகற்றுவிக்கும் திருவருட்சத்தியாக மாற்றுகின்றது.

31. திருவருட்சத்தி வந்து வீழ்வதைச் சத்திநிபாதம் என்பது சாத்திரம். திருவருட்சத்தி வயப்பட்டவர்களைச் சத்திநிபாதச் செல்வர்கள் என்பது சைவமரபு. சமயகுரவர்கள் நால்வரும், வேறு சில பெரியார்களும் சத்திநிபாதச் செல்வர்கள். தகுதிநோக்கித் திருவருளை நம்மிடத்தில் சேர்த்துவைக்கும் பேராற்றல் இவர்கட்குண்டு. இவர்கள் இம்முறையில் செய்யும் அருஞ்செயல்கட்கே "அற்புதங்கள்" என்று பெயர். தொண்டர் நாதனைத் தூதுவிடுதல், முதலை யுண்ட பாலனை அழைத்தல், என்பு பெண்ணுருவாக்கல், மறைக்கத வினைத்திறத்தல் முதலிய அற்புதங்களை அறியாதார் யாவர். இவற்றின் விரிவைப் பெரிய புராணத்துட் பல வரலாறுகளிற் காணலாம். இப்பெரியார்கள் உலகப் பொதுமக்களோடு கலந்து பலவகையான தொண்டுகளைப் புரிவார்கள். எப்போதும் இறைவழிபாடு செய்வார்கள். இவ்வழிபாடு சிவலிங்கம், கூத்தப்பிரான், உமையொருபாகன் முதலிய உருவத் திருமேனிகளில் தாவர நிலையிலும், சிவனடியார்கள், இடருற்றிருக்கும் உயிர்கள், தாழ்ந்த மக்கள் முதலியவர்களிடத்தில் ஜங்கம நிலையிலும் எப்போதும் நிகழ்ந்துகொண்டே இருக்கும். சரியையுட்சரியை முதலாக ஞானத்துள் ஞானம் ஈறாக உள்ள 16 படிகளில் இவ்வழிபாடு அமைந்திருக்கும்.

32. " கல் எறியப் பாசிகலைந்து நன்னீர்காணும் நல்லோர்கள், சொல் உணர்வில் ஞானம் வந்து தோன்றும் பராபரமே " என்பர் தாயுமானார். " நீயும் ஒருசொற்பொழிவு செய்தல்வேண்டும் " என்ற கட்டளையாகிய கல்லை எறிந்தது நமது சமாஜம். எனது மனத்திற் படிந்த பாசியை ஒரு சிறிது கலைத்தது. சாத்திரக் கருத்துக்கள் நிறைந்த நன்னீரைச் சிறிது கண்டேன். இக்கருத்துக்களை விளங்கக் கூறிய நல்லோர்கள் சொல் உணர்வில் ஞானம் வந்து தோன்றும் என்ற நம்பிக்கையே என்னை இங்குப்பேச

வைத்தது. நான் கூறியவற்றிலுள்ள பற்பல குற்றங்களை நன்கறிவேன், நீங்களும் அறிவீர்கள். இவற்றையெல்லாம் பொறுத்து, குணம் உண்டேல் அதைமட்டும் கைக்கொள்ளுமாறு வேண்டிக்கொண்டு, இவ்வளவுநேரம் எனது புன்மொழிகளை அமைதியாகக் கேட்ட உங்கட்கு மறுமுறை எனது நன்றியறிதலான வணக்கத்தைச் செலுத்தி அமர்கின்றேன்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்,
வீழ்கதண் புனல், வேந்தனும் ஓங்குக,
ஆழ்க தீயது, எல்லாம் அரன் நாமமே
சூழ்க, வையகமும் துயர் தீர்கவே.

ஆறிரு தடந்தோள் வாழ்க, அறுமுகம் வாழ்க, வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க, குக்குடம் வாழ்க, செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க, யானைதன் அணங்கு வாழ்க,
மாறிலா வள்ளி வாழ்க, வாழ்க சீரடியார் எல்லாம்.

திருச்சிற்றம்பலம்

---

# ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகரும் - சைவமும்

(ராவ்சாஹிப் நல். முருகேச முதலியார், பி. ஏ.)

சித்தாந்த சைவ சமயமானது வரம்பழியாமற் பாதுகாத்த பெருமக்களுள் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகர் அவர்கள் தலைசிறந்தவர் ஆவர். சென்ற நூற்றாண்டில் சமயப் பூசல்கள் மலிந்து கிடந்தன. அத்தகைய சந்தர்ப்பங்களில் இறைவன் அருளால் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் போன்ற பல பெரியோர்கள் அவ்வப்போது தோன்றி சைவ சமயத்தை நிலைநிறுத்தினர். ஸ்ரீலஸ்ரீ நாயகர் அவர்கள் செய்த தொண்டு பலவிதத்தில் சிறந்ததாகும். பரசமயத் தூஷணைகளை நிராகரணம் செய்ததுமட்டுமல்லாமல் வைதீக சைவ நெறியின் தன்மையை நன்றாய் விளக்கினார். அவர் பிறப்பால் வேறு சமயத்திற் பிறந்து[1] அத்துவித மதத்தில் ஈடுபட்டிருந்த ஆசிரியரிடம் தொடர்பு பெற்று சிறு வயதிலேயே சித்தாந்தச் சென்னெறியின் செம்பொருளை நன்குணர்ந்து தம் ஆசிரியரையும் சைவ சித்தாந்த நெறிக்குப் புகட்டி சைவ உலகம் உய்ய சித்தாந்த ஸ்தாபனம் செய்தது திருவருளின் மாட்சியே யாகும்.

1. தின்னை தங்கவேலு முதலியார் - ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகர் அவர்கள் சரித்திரம், பக்கம் 1.



2. ஸ்ரீலஸ்ரீ நாயகர் அவர்கள் சென்னை சூளையில் 1846-ம் ஆண்டு ஆகஸ்ட் 6-ந்தேதி அவதரித்தனர். தாய் தந்தையர் இட்ட பெயர் அரங்கசாமி என்பதாகும். அவருக்கு வாய்த்த ஆசிரியரால் அவர் சோமசுந்தரம் என்று அழைக்கப்பெற்று, அவர்களால் தமிழ்மொழி, வடமொழி கற்பிக்கப்பட்டார். சென்னை இராஜதானிக் கல்லூரியில் ஆங்கிலமும் தெலுங்கும் பயின்று பிரவேசப் பரீட்சை வகுப்பு வரையில் வாசித்து, பின் நகராண்மைக் கழக அலுவலகத்தில் உத்யோகத்தில் அமர்ந்திருந்தனர். அவருடைய ஆசிரியராகிய அச்சுதானந்தர் சங்கர மதத்தில் மிகப் பற்றுடையவராய் அந்நூல்களையே நாயகர் அவர்களுக்கும் போதித்து வந்தனர். ஆனால் நாயகர் அவர்களுக்கு அதில் ஏற்பட்ட பல ஆசங்கைகளை ஆசிரியரவர்களால் தீர்க்க முடியாமற் போயிற்று. நாயகர் அவர்கள் தமக்குள்ளேயே, இறை, உயிர், உலகம் இவைகளின் தத்துவங்களைப் பற்றிச் சிந்திக்கலாயினர். அவருக்கு வயது அப்போது சுமார் 20 இருக்கும்.

3. இறைவன் அருளால் ஒரு சமயம் மதுரைநாயகம் பிள்ளை என்பவர் நாயகரைச் சந்தித்து அப்போது தாம் அச்சிட்ட "சிவஞான போதம்" என்ற நூலை அவருக்குக் கொடுத்து அந்நூல் தான் அறிவையும் சமயவுணர்ச்சியையும் அளிக்க வல்லதென்று கூறினார். நாயகர் அவர்கள் அந்த நூலை உவகையுடன் படித்து "மெய்ப்பொருள் வரம்பு தெரிந்து தமக்கு இசைவுபடுதலை உணர்ந்து மெய்ம்மயிர் முகிழ்த்து கண்ணீர் ததும்பி அந்நூலைச் சிரமிசைத்தாங்கி ஆனந்த வெள்ளத்தில் ஆய்ந்தனர்![2] பிறகு மெய்கண்ட சாத்திரங்கள் யாவையும் நன்கு கற்றுணர்ந்தார். தமக்கு ஆசிரியராக விருந்த அச்சுதானந்தர் அவர்களுக்கும் அந்நூலின் உண்மையை எடுத்துக்காட்டி அவரையும் சித்தாந்த நெறிபற்றும்படிச் செய்வித்தனர். ஆசிரியரும் சிவதீக்ஷை பெற்று ஏகாம்பர சிவயோகியரென்று பெயர் பூண்டார்.

2. நாகப்பட்டினம் வேதாசலம் பிள்ளை - "சோமசுந்தரக் காஞ்சி" முகவுரை, பக்கம் 4. (1902)

பிறகு சில வருடங்கள் ஆசிரியரும் தாமுமாகச் சேர்ந்து சைவ சித்தாந்த உபந்நியாசங்களும் பல சிவாலயத் திருப்பணிகளும் தீவிரமாகச் செய்துவந்தார்கள். முக்கியமாக சைவ சமயாசாரியர்கள் திருநக்ஷத்திரங்களைச் சிறப்பாகக் கொண்டாடும்படிப் பிரசாரம் செய்துவந்தனர். சென்னையில் ஒரு கோயிலின் தூணில் ஓருருவம் சிவதூஷணையாக விருந்ததைக் கண்டு பலப் பிரமாணங்கள் கொண்டு கண்டித்தார். சமய வாழ்வுக்கு உத்தியோகம் தடையாக விருந்ததால் 1881–ம் ஆண்டு நகராண்மைக்கழக வேலையை விட்டு நீங்கினர். நாயகரவர்கள் செய்துவந்த முக்கியமான வேலை சைவசித்தாந்த உபந்நியாசங்களும் பத்திரிகைகளில் சைவ சித்தாந்தக்கருத்துக்களை விளக்கமாக எழுதி வந்ததுமாகும். நாயகர் அவர்கள் வேதங்கள், உபநிடதங்கள், சைவ ஆகமங்கள், புராணங்கள் முதலியவைகளை நன்முகக் கற்றவர்கள். ஸ்ரீ அப்பைய தீட்சிதர் கிரந்தங்களில் அதிகப்பழக்கம் உடையவர்கள். வேதங்களையும் உபநிடதங்களையும் பிராசத்துடன் சுரநெறி தவருமல் சொல்லும் வல்லமையுடையவர்.

4. சைவ சித்தாந்தத்தின் மகிமை நாயகர் அவர்கள் பிரசங்கங்களால் உலகறிய விரிக்கப்பட்டது. அந்தணர்கள் கூட நாயகர் அவர்களின் வடமொழி யாற்றலைக் கண்டு வியந்தனர். விவாதங்களில் நாயகர் அவர்களுடைய தர்க்க ஞானம் பெரிதும் விளங்கியது. சைவ மக்கள் நாயகர் அவர்களைப் பல விடங்களில் அழைத்து சைவ சித்தாந்த ஸ்தாபனங்களை நிருமித்துவந்தார்கள், சென்னை, நாகை, திரிசிரபுரம், உறையூர், தூத்துக்குடி, கோயம்புத்தூர், திருச்செங்கோடு முதலியவிடங்களில் அப்படிப்பட்ட ஸ்தாபனங்கள் விரைவில் நிருமிக்கப்பட்டன. மடாதிபதிகளும், அரசர்களும் அவருக்கு வேண்டிய உதவி புரிந்து வந்தார்கள். இராமநாதபுரம் ஸ்ரீ பாஸ்கர சேதுபதி மகாராஜா அவர்கள் " வைதீக சைவசித்தாந்த சண்டமாருதம் " என்னும் பட்டப்பெயர் தந்து உபசரித்தார்கள். திருவாடுதுறை ஆதீனத்தார், " பரசமய கோளரி " என்னும் பட்டப்பெயர் கொடுத்ததாகத் தெரிகிறது. திருஞானசம்பந்தரையே குருமூர்த்தமாகக் கொண்ட நாயகர் அவர்களை "சைவ மார்த்தாண்டன்" என்று சைவ உலகம் அழைத்துப் போற்றியது.



5. நாயகர் அவர்கள் சுமார் நூறு கிரந்தங்கள் இயற்றியுள்ளதாகத் தெரிகிறது. இந்நூல்களை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று சைவ மதத்தைச் சுபக்கம் செய்தவை ; மற்றொன்று பரமதங்களைப் பரபக்கம் செய்தவை. அவர்கள் எழுதிய நூல்களுள் முக்கியமானவை, சைவ சூளாமணி, பரதத்துவப் பிரகாசிகை, பிரமத்துவ நிரூபிகை, சிவாதிக்க ரத்னவளி, அர்ச்சா தீபம், ஆதி சைவப் பிரபாவம், சித்தாந்த சேகரம், சித்தாந்த பூஷணம், சிவதத்துவ சிந்தாமணி, மெய்கண்ட சிவதூஷண நிக்ரகம், மெய்கண்ட சிவஸ்தவம், ஆசாரியப் பிரபாவம், விநயகப் பிரபாவதீபிகை, தணிகாசல ஸ்தவம், ஞானசம்பந்த பரத்வ நிரூபணம், வேத சிவாகம பிராமாணியம், சித்தாந்த வுந்தியார் முதலியன.

6. நாயகர் அவர்கள் தான் சைவ சித்தாந்தக் கருத்துக்களை முதன் முதலில் கத்திய ரூபத்தில் வெளியிட்டவர்கள். அவர்கள் நடை அழகிய மணிப்பிரவாள நடையாகும். " இவர் அப்பைய தீட்சிதர் அவர்களைப் போன்று சத நூல்களை இயற்றி, ஹரதத்தர் போன்று தீரம் வகித்து, திருஞானசம்பந்தரைப் போன்று திருமேனி கொண்டு, திருநாவுக்கரசரைப் போன்று சிவவேடம் பூண்டு, சுந்தரரைப் போன்று தாமரைத் தண்ணீர்க்கொப்பாம் இல்லறவாழ்க்கையை நடத்தி, சேக்கிழார் போன்று அடியார் பெருமையை விளக்கி, மணிவாசகரைப் போன்று இன்னிசையாய், கனிவாய், பிரசங்கித்ததால் யாவர்தான் இவர் கட்டில் அகப்படாதார் !" என்று வியந்து பாராட்டப்பட்டார்கள்.

7. இவ்விதம் சுமார் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக சைவத்துக்கே உழைத்து 1901–ம் ஆண்டு பிப்ரவரி 22–ந் தேதி சிற்றம்பலமுடையான் நினைவுடன் சிவகதி யடைந்தார். சைவ மார்த்தாண்டன் அகன்ருன் என்று சைவ உலகம் துயருற்றது. சைவப்பெருமக்கள் பலர் இரங்கற் பா செய்தார்கள். அவைகள் எல்லாம் " சோமசுந்தரக் காஞ்சி " என்ற ஒரு புத்தகமாக வெளியிடப்பட்டது. பல சீடர்கள் " சோமசுந்தர மும்மணிக்கோவை "[2] " சோமசுந்தர நாயகர் தோத்திரச் சோடகம் "[3] " சோமசுந்தர

1. நின்றை தங்கவேலு முதலியார் (1902) 2. அ. சோமசுந்தர முதலியார். (1904) 3. இ. கேசவ முதலியார் (1904)

ஸ்தவம்" என்ற பல நூல்களை இயற்றினார்கள். நாயகரவர்கள் நிறுவிய வேதாகமோகத் சைவசித்தாந்த சபையானது சில பழைய அன்பர்களால் இன்றும் நடத்தப்பட்டு நாயகரவர்களின் குருபூசை பக்தியுடன் நடத்தப்பட்டு வருகிறது.

8. சோமசுந்தர நாயகர் அவர்கள் வாழ்ந்த காலத்தில் அவருக்குப் பல நண்பர்களும் மாணாக்கர்களும் இருந்தார்கள். அவர்களுள் முதன்மையானவர்[4] (அடியேனது பெரிய தகப்பனாராகிய) நல். சுப்பிரமணிய முதலியார் ஆவர். சைவசித்தாந்த வல்லுநர், ஜே. எம். நல்லசாமி பிள்ளையவர்கள் நாயகர் அவர்களிடம் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள். யாழ்ப்பாணம் கதிரைவேற் பிள்ளையும் அவருடைய நேசத்தைப் பெற்றவர். பிள்ளையவர்கள் எழுதின இரங்கற் பாடலிற் கீழ்க்காணும் அடிகள் போற்றத்தக்கன.

"சைவமெங்கே நீறுகண்டி தாமெங்கே சித்தாந்தத்
வைதீக நூலெங்கே யெஞ்சந்தானர் - தெய்வநான்
முந்தருளார் கோயிலூரு மொய்யெங்கே நஞ்சோம
சுந்தரவேள் தோன்றானேல் சொல்"

மறைமலையடிகளார்[5] நாயகர் அவர்களிடம் குரு சீட முறையிற் பாடங் கேட்டவர். அவர் அன்பைப் பல விதத்திலும் பெற்றவர். உ. வே. சுவாமிநாதையர் அவர்கள், ஜே. எம். நல்லசாமிப் பிள்ளையவர்கள் இன்னும் பல பாவலர்களும், சித்தாந்தப் பெரியார்களும் நாயகர் அவர்களைப் போற்றிப் புகழ்ந்தனர். அய்யர் அவர்கள் நாயகர் அவர்களிடம் சமயம் வாய்த்தபோது அளவளாவி இன்புற்றவர்.[6] அவர் எழுதிய "மத்தியார்ச்சுன மான்மியத்தை" நாயகர் மேற்பார்வையிட்டுக் கொடுத்தார்.[7] மறைமலையடிகளார் நாயகர் அவர்களின் சரித்திரத்தை எழுத ஆரம்பித்து முடிவுறாமல் நின்றுவிட்டதாகத் தெரிகிறது. தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களும், தம் சிறு பிராயத்தில் நாயகர் அவர்களின் பிரசங்கங்களை அனுபவித்ததாகத்

4. திரு. வி. க. 'வாழ்க்கைக் குறிப்புகள்' – பக்கம், 813 (1944). 5. வ. நாகலிங்கம், "சித்தாந்தம்" பக்கம், 112 – மார்ச்சு 1954. 6. உ. வே. சு. 'என் சரித்திரம்' அத்தியாயம் 93. 7 இது அய்யர் அவர்களின் பேரர் திரு. ச. க. சுப்பிரமணியம்



தெரிகிறது. "முதன்முதல் என் காதுக்கு எட்டிய சைவப் பிரசங்கம் வைதீக சைவ சித்தாந்த சண்டமாருதம் சோமசுந்தர நாயகர் அவர்களுடையது."[8] என்று தம் "வாழ்க்கைக் குறிப்புகள்" என்ற நூலிற் குறித்திருக்கிறார்கள். நாயகரவர்களுடைய நூல்களைப் படித்ததாகவும், அவர் நிறுவிய வேதாகம சைவ சித்தாந்த சபையில் தொடர்பு பெற்றிருந்ததாகவும் கூறியுள்ளார்கள்.[1] சித்தாந்தப் பேராசிரியரான தூத்துக்குடி ந. சிவகுருநாதன் பிள்ளையவர்களும் நாயகரவர்களைப் போற்றி எழுதியிருக்கிறார்கள். அது இங்கே தரப்பட்டுள்ளது.

"சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் யாழ்ப்பாணம் நல்லூரிற் தோன்றிய சைவத்திரு ஆறுமுக நாவலரவர்களும், சென்னைச் சூளையில் தோன்றிய சைவ சித்தாந்தச் சண்டமாருதமெனச் சிறப்புப் பெற்ற சைவத் திரு. சோமசுந்தர நாயகரவர்களும் அரும்பணி புரிந்து சைவநூல் வெளியீடுகளாலும் சைவசித்தாந்த நூலுரையாலும் சொற்பொழிவாலும் சைவசித்தாந்தத்தைப் பிறங்கச் செய்தார்கள். இவர்களிற் திரு. சோமசுந்தர நாயகரவர்கள், சைவமென்ற பொதுப்பெயராலன்றிச் சைவசித்தாந்தமென்னும் சிறப்புப் பெயராலேயே நமது சைவம் வழங்கப்பெறுதல் வேண்டுமென்பதை வற்புறுத்தி வழங்கச் செய்தார்கள். யான் பதினான்கு வயதுடைய சிறுவனாயிருந்தபோது (கி. பி. 1887) சைவத் திரு. சோமசுந்தர நாயகரவர்கள் தூத்துக்குடிக்கு எழுந்தருளி, "பாசம் பசு பதியாகும் இவைமூன்றும், பேசில் அநாதியென் றுந்தீபற, பெரியோர் சொல்வார்களென் றுந்தீபற" என்ற தாம் இயற்றிய சித்தாந்த உந்தியார் செய்யுளை முன்னுரையாகக் கொண்டு அரும்பெருஞ் சொற்பொழிவொன்று ஆற்றினார்கள். சிவபிரான் திருவடிக்கண் சிறந்தொழுகும் பேரன்பர், தவம் பெருக்கும் திருநீறும் தாழ்வடமும் பொலிவுடையார், அவம்பெருக்

அவர்களால் அய்யரவர்களின் கைக்குறிப்புப் புத்தகத்திலிருந்து தரப்பட்டது. 8. திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள் – பக்கம் 587.

1. திரு. வி. க. 'வாழ்க்கைக் குறிப்புக்கள்' – பக்கங்கள், 126, 588.

கும் பரசமய மானவற்றின் அரந்தைகெடச், சிவம் நிறைக்கும் சித்தாந்தச் செந்நெறியோம்பும் பெரியார் ஆகிய அவர்கள் திருவுருவம் அடியேனது உள்ளக் கிழியின்கண் உருவுபெறவமைந்த உயிரோவியமாயிற்று. அவர்கள் திருவாக்கில் எழுந்த அமுத வொலி அடியேனது உயிரிற் கலந்தது.''[2]

நாயகர் அவர்கள் செய்த பல நூல்களுள், "சித்தாந்த உந்தியார்" என்ற உயரிய சிறு நூலை சித்தாந்திகளாகிய நாம் படித்துப் பிறருக்கும் சொல்லுவது கடமையாகும். இது 108 கலித்தாழிசைகளால் ஆயது. சித்தாந்த சாத்திரங்களின் பல விழுமிய பொருள்களைத் தெளிவாக உணர்த்துவது. உதாரணமாக 'சித்தாந்தம்' என்னும் சொற்பொருட் காரணத்தைக் கீழ்க்கண்ட பாட்டில் அறியலாம்.

"எல்லா மதங்களும் பூருவ மாகையால்
சொல்வார் சித்தாந்த மென்றுந்தீ பற
சொற்பொருள் தேர்ந்தா ரென்றுந்தீ பற"

அத்துவிதத்தின் இயல்பைக் கீழ்க்கண்ட இரண்டு பாட்டுக்கள் நன்றாகத் தெரிவிக்கின்றன.

"ஏகமென் பார்சில ரத்துவி தப்பொருள்
மூகாற் றாரு ளுந்தீபற
முற்றும் விரோதமென் றுந்தீபற"

"ஒன்றற் றிரண்டற் றுபயமு மற்றதற்
றொன்றுதல் கூர்ந்துண ருந்தீபற
உயாத்து விதமென் றுந்தீபற"

9. நாயகர் அவர்களின் நூல்களில் சித்தாந்தத்தைப் பலப்பிரமாணங்கள் காட்டி நன்றாக விளக்கியிருக்கிறார்கள். அவைகளைச் சைவர்கள் போற்றக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்களின் சுபக்கமான நூல்களைத் திரட்டி மறுபடியும் அச்சிட்டால் நலமாயிருக்கும்.[10]

நாயகர் அவர்களின் குருபூசை மாசி ரேவதியாகும். இக்கட்டுரை அவர்களின் நினைவுக் காணிக்கையாக எழுதப்பட்டது.

---

2. ந. சிவகுருநாதம் பிள்ளை — 'சிவஞான சித்தியார் ஆராய்ச்சி'—பக்கம் IX (1949)

# "இலங்கு நூல்"

[ஆ. முத்துக்குமாரசாமி பிள்ளை]

திருவள்ளுவர், இலங்குநூல் வரை கற்கவேண்டும். இலங்குநூல் கற்றவர் அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய உறுதிப் பொருள்களை உணர்வர். அறிவறிந்து ஆற்றின் அடங்கப் பெறுவர். மன அடக்கம், அமைதியான வாழ்க்கை, பண்பு உடையவர் ஆவர். ஒளி நெறியைக் கைக்கொண்டு மேம்படுவர் என அருளியுள்ளார்.

இலங்கு நூல்வரை கல்லாதவர் கல்வியில் குறையுடையவர். மனம் செம்மை அடையாதவர். விலங்கு மனம் உடையவராய் பிறருக்குத் தீமை செய்வர். உயர்ந்தோர் சொல்லிய பொருள்களை இல்லையென்று சொல்லி பெரும் பிதற்றுப் பிதற்றித் திரிவர்.

இலங்கு நூல் கற்றவர்க்கும், இலங்கு நூல் கல்லாதவருக்கும் வேற்றுமை மிகப்பெரிது. மனிதனுக்கும் விலங்குக்கும் உள்ள வேற்றுமைபோல் இருக்கும் என்று உவமையில் வைத்து விளக்குகிறார்.

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்." என்கிறார்.

இலங்கு நூல் – விளங்கிய நூல்.

இலங்கு நூல், அறிவு விளக்கம் தரும் நூல். அது ஒளி நூல். மக்களிடத்தில் அன்பு, நாண், ஒப்பரவு, கண்ணோட்டம், வாய்மை ஆகிய சிறந்த குணங்களை விளங்கச் செய்யும். வடமொழியில் வேதங்களும் ஆகமங்களும் மெய் நூல்கள். தமிழ் மொழியில் திருமறைகளும், சாத்திரங்களும் மெய் நூல்கள். வடமொழி நூலில் உள்ள கருத்துக்கள் தமிழ் மொழி நூலிலும் உள்ளன. அதனால் அது மொழிபெயர்ப்பு என்று ஆகமாட்டாது. திருவள்ளுவர் எல்லா நூல்களையும் எல்லா மொழிகளிலும் கற்றிருக்கக் கூடியவர்.

தற்காலத்தில், தமிழில் தேர்ச்சி பெற்றவர்கள் ஆங்கிலத்திலும் தேர்ச்சிபெற்றிருக்கிறார்கள். ஆங்கிலத்தில் தேர்ச்சிபெற்றவர்கள் தமிழிலும் தேர்ச்சிபெற்றிருக்கிறார்கள். ஆனால் ஆங்கிலம் கற்றவர்கள், தமிழில் பேசும்போது, ஆங்கிலச்சொற்களையும், புலவர்களையும், நூல்களையும் எடுத்துச் சொல்லி தமிழ்க் கருத்திற்கு ஆதரவு காணுகிறார்கள்.

முந்திய காலத்தில் தமிழ் மக்கள் வடமொழியையும் நூலையும் கற்றிருந்தார்கள். எந்த உண்மைப் பொருள்களைக் கூறும்போதும், எழுதும்போதும், எல்லா நூல்களையும் மனதிற் கொண்டு சொல்லியும் எழுதியும் வந்தார்கள். இந்த உண்மையைத் திருவள்ளுவர்,

"யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லையெனைத் தொன்றும்
வாய்மையின் நல்ல பிற" என்றார்.

இதற்கு உரைகாணவந்தப் பரிமேலழகர் மெய் நூல், ஆகமம் என்றும், அதை அருளியவர் இறைவன் என்றும் விளக்க உரை கூறுகிறார்.

தொல்காப்பியரும் யார் தந்தது, முதல் நூல் என்று கூறவந்தவர்.

"வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல்நூல் ஆகும்."

என்று அருளுகிறார்.

இந்த உண்மையை அருணந்தி சிவனார், சிவஞான சித்தியாரில் 266-வது பாட்டில் அருளுகிறார்.

"அருமறை யாகமம் முதனூல், அனைத்தும் உரைக்கையினால்
அளப்பரிதாம் அப்பொருளை அரனருளால் அணுக்கள்
தருவர்கள், பின் தனித்தனியே தாமறிந்த அளவில்
தர்க்கமொடுத் திரங்களினாற் சமயம் சாதித்து
மிருதிபுராணம் கலைகள் மற்று மெல்லாம்
மெய்ந்நூலின் வழிபுடையாம் அங்கம் வேதாங்கம்
சுருதி சிவாகமம் ஒழியச் சொல்லுவதொன்றில்லை
சொல்லுவார் தமக்கறையோ சொல்லொணாதே."

இதன் பொருளாவது – மெய்நூல், சுருதியும் சிவாகமும் என்றும், அதில் எல்லாம் அடங்கி உள்ளன என்றும் கூறப்படுகின்றன. இவைகள் தற்சமயம் வடமொழியில் உள்ளன. தமிழ் மொழியில் இருந்திருக்க வேண்டும். தமிழ் மக்களின் கவனக்குறைவால் அழிந்து போயிருக்க வேண்டும். இன்று தமிழில், பன்னிரு திருமறைகள் வேதமாகவும், பதினான்கு சாத்திரங்கள் ஆகமங்களாகவும் உள்ளன. அவைகளைக் கற்றல் அவசியம். அவைகள் ஒளி நூல்கள். அவைகள் தான் இலங்நூல். அதைக் கற்றவர்கள், மேம்பாடு அடைதல் திண்ணம்.



அதனால் தமிழ்மக்கள் இலங்குநூல்கள் என தோத்திர சாத்திர நூல்களைக்கற்று வாலறிவன் நற்றாள் தொழுது, கல்வியினால் ஆய பயனை அடைய இறைவன் அருள்புரிவானாக. எல்லோரும் இரண்டுவகை நூல்களையும் கண்ணெனக் கருதல் வேண்டும். அவைகள் செறிவறிந்து சீர்மை பயக்கும் தன்மையுடையனவாகும்.

"செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து
ஆற்றின் அடங்கப் பெறின்."—திருக்குறள்

---

# அறுபான்மூவருள் நம்பி காலத்தவர்

(ம. சிவகுருநாதப் பிள்ளை)

அறுபான் மூவருள் அறுபத்து மூன்றாமவர் நம் நம்பி ஆரூரரே யாவர். இவரால் தொகுக்கப்பெற்ற மற்ற அறுபத்து இருவருள் பலர் இவருக்கு முற்பட்டோரும், சிலர் இவர் காலத்தவரும் ஆவர். சடையனார், இசைஞானியார், நரசிங்கமுனையரையர், விறல்மிண்டர், சோமாசிமாறனார், கோட்புலியார், ஏயர்கோன் கலிக்காமர், மானக்கஞ்சாறர், கழற்சிங்கர், செருத்துணையார், சேரமான், பெருமிழலைக் குறும்பர் இவர்கள் நம்பிகாலத்தவர் ஆவர்.

**(1) சடையனார்** :—முப்போதும் திருமேனி தீண்டும் முறைமையாளராகிய இவ்வாதி சைவப் பெருந்தகையார் நம்பியின் தந்தையாராவார். அவர் வாழ்ந்த பதியாகிய திருநாவலூர்க் கோயில் இறைவனை பூசிக்கும் முறையில் அவ்வூர் மன்னரின் பெருமைக்குரியவர் ஆவர். பெறற்கரும் நம்பியை ஈன்றெடுத்த இவ்வடியார் தன் மகனாரது அரும் பெரும் வாழ்வை பின்னர் (திருத்தொண்டத் தொகை பாடிய காலத்தும் பின்னும்) பார்க்கும் பேற்றை விண்ணுலகில் இருந்து காண கொடுத்துவைத்தவர் எனத் தெரிகிறது. காரணம்: திருத்தொண்டத் தொகையின் இறுதிப் பாடலில் தம் தந்தையை "......என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்......" எனக் குறிப்பதால்.

**(2) இசைஞானியார்**:—அறுபான் மூவருள் மூன்று பெண் அடியார்களுள் இறுதியாராகிய இவ்வம்மையார் நம்பியை ஈன்ற பெருவாழ்வு பெற்றவர். இவ்வம்மையார் புகுந்த இடம் திருநாவலூரும் பிறந்த இடம் திருஆரூரும் ஆகும். பிறந்த பதி திருவாரூர் என்பது திருவாரூர்ப் பூங்

கோயிலிலுள்ள கல்வெட்டால் அறியக்கிடப்பது. மேலும் நம்பியும் திருநாவலூரரேயாயினும் இவர் பிறந்த பதி ஆரூர் என்றே கொள்ளல்வேண்டும். காரணம்: நம் தமிழ்நாட்டில் நம் தமிழ் பெண்மணிகள் தம் தலைக்குழந்தைப் பேற்றை தம் தாயகத்திலே பெறுவர். அத்துடன் அக்குழந்தைக்குத் தம் தாயகத்துச் சார்பிலேயே பெயரும் இடுவர். இஃது இப்போதும் காணப்படுவதாகும். அதுபோல் நம் நம்பி தம் அம்மான் இல்லமாகிய ஆரூரிலே பிறந்திருத்தல் வேண்டும். அதுபோது நம்பி ஆரூரன் எனப் பெயர் பெற்றிருத்தல் வேண்டும். தம் இனிய வாழ்வை பரவையாருடன் ஆரூரில் கழித்தது திருவாரூர்ப் பெருமானைத் தோழமைபெற்ற காரணத்தோடல்லாது தன் அம்மான் ஊர் என்ற ஓர் காரணங்கூட ஆகும் என எண்ணலாம்.

(3) **நரசிங்கமுனையரையர்** :—நம்பியை ஈன்ற மேற்கூறிய இருமுதுகுரவரினும் நம்பியைப் பேணி வளர்க்கும் பேறு பெற்ற இக்குறுநில மன்னர் பெருமான் நம்பிவாழ்ந்த திருநாவலூரரர் ஆவர். இவ்வரசர் பெருமானால் வளர்க்கப் பெற்ற காரணத்தால் அன்றோ நம் நம்பிகள் தம்மரபுக்குரிய வைதிக வேடத்துடன் விளங்காது அரசர் கோலத்துடன் மாவும், களிறும் ஊர்ந்து விருதுகளுடன் எங்கும் செல்லும் வழக்கங் கொண்டார். இவ்வளர்ப்புத் தந்தையாரை நம் நம்பிகள் தம்மூராகிய திருநாவலூர்ப் பதிகத்து இறுதியில் அத்திருநாவலூரரை "நாதனுக்கூர், நமக்கூர் நரசிங்க முனையரையன் ஆதரித்து ஈசனுக்கு ஆட்செயுமூர் அணிநாவலூர்" எனச் சிறப்பித்துள்ளார்.

(4) **விறல்மிண்டர்** :—அறுபான் மூவரை நம்பிமூலம் நாம் அறியக் காரணமாய இவ்வடியவர் பெருமான் தற்போது மலையாளம் வழங்கும் மலைநாட்டுச் செங்குன்றூரில் தோன்றி சிவங்கமழும் சோணாட்டு ஆரூரில் வாழ்ந்துவந்தவர். தேவாசிரியப் பெருமண்டபத்துள் விளங்கிய அடியவர்களை வணங்காது ஏகிய நம்பியைப் பகைத்துப் பின் நம்பி தம்பிரான் அருளால் திருத்தொண்டத் தொகை பாட அதனினின்றும் நம்பியின் அடியார் பக்தியை உணர்ந்தவர்.

(5) **சோமாசிமாறனார்** :—வேத வேள்வியுள் வேட்கையுற்று அதைப் புரிந்துவந்த இப்பூசுரர்கோன் ஆரூருக்கு தென்



கிழக்கில் உள்ள திரு அம்பர் மாகாளத்தில் வாழ்ந்து வந்தவர். நம்பியுடன் மிக்க தொடர்புடன் வாழ்ந்து வந்தவர். இவர்களது நட்பின் பெருமையை திருஅம்பர் புராணமும், அங்கு ஆண்டுதோறும் நடைபெறும் வைகாசி யாகப் பெருவிழாவும் விளக்கும்.

(6) **கோட்புலியார்** :—மெய்மை நிலை வழுவாத வேளாண் குடியில் ஆரூருக்கு அண்மையிலுள்ள திருநாட்டியத்தான் குடியில் தோன்றிய இவ்வீரக்குரிசில் நம்பியை தம்மருகராக்க முயன்று பின் தமராக்கிக்கொண்டவர். ஆரூரின் தொடக்க வாழ்க்கையில் நம்பி இவர் இல்லஞ் சென்றபோது இவர் தம் குமாரிகளாகிய வனப்பகையார், சிங்கடியார் இருவரையும் நம்பியை மணக்கும்படி வேண்ட அதனை நம்பி மறுத்துத் தம் குமாரிகள் எனக்கொண்டு தம் பதிக இறுதிகளில் சில இடத்து 'வனப்பகையப்பன்' 'சிங்கடியப்பன்' எனத் தான் அவர்களுக்கு அப்பன் என்பதை விளக்கினார்.

(7) **ஏயர்கோன் கலிக்காமர்** :—நம்பி இவரைக் காணுமுன் தம் திருத்தொண்டத் தொகையில் வைத்துப் பாடியுள்ளார். பரவையின் பொருட்டு ஆரூர் வித்தகனை நம்பி தூதுவிட்டதை அறிந்து முனிந்து பின்னர் நம்பி இவர்பால் வந்தபோது அவரைக்காண மனமில்லாது தன்னுயிரை மாய்த்துப் பின் இறையருளால் உயிர்பெற்று நம்பியின் பெருமையை உணர்ந்து நம்பியால் முன்னர் திருத்தொண்டத் தொகையின் இடையில் இருக்கப்பெற்ற பேறேயன்றி அவர் வாழ்ந்த பதியின் அருகில் உள்ள திருப்புன்கூர் பதிகத்து இடையிலும் நம்பியால் பாடப்பெற்றவர்.

(8) **மானக்கஞ்சாறர்** :—விருந்திருக்க உண்ணாத வேளாண் குடியில் தோன்றிய இவ்வடியவர் நம்பியுடன் நேரில் தொடர்புடையர் அல்லர். நம்பியின் அன்பராகிய ஏயர்கோனுக்கு இறைவனால் ஆட்கொள்ளப்பெற்ற தம்மகளைத் தந்து மருகராக்கிக் கொண்டார்.

(9) **கழற் சிங்கர்**:—கருங்கற் பணியால் கண்ணுதற் கடவுளுக்குத் திருக்கோயில்களை முதன் முதல் சமைக்கும் பணியைத் தொடங்குவித்த பல்லவர் குலத்துத் தோன்றி இவ்வரசர் பெருமான் நம்பியார் திருத்தொண்டத் தொகையில் "......கடல்சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான் காடவர்கோன் கழற்சிங்கன்..." என நிகழ்காலத்தில் (காக்

கின்ற என்று) பாடியுள்ளார். ஆதலின் இவர் நம்பிகாலத்தவர் ஆவர்.

(10) **செருத்துணையார்** :—அடியவர்கள் தம் சித்தந்தெளிய தம் பத்திமலரால் தூவிப் பணியும் ஆரூர்ப் பூங்கோயிலில் உள்ள அரநெறிச் சிவாலயத்து இவர் இறைவனுக்கு மலர் மாலைகளை ஆக்குவிக்கும் பணியில் இருந்தவர். இவ்வாறு மலர்களை மாலையாகத் தொடுத்துக்கொண்டிருந்த சமயம் ஓர் நாள் காடவர்கோனாகிய கழற்சிங்கர் அங்கு தம் அரசியுடன்வர, அவ்வரசியார் அங்கு செருத்துணையார் தொடுத்துக் கொண்டிருந்த மலர்களில் ஒன்று முகர அதனைப் பொறாத செருத்துணையார் அரசியெனவும் பாராது அவர் மூக்கை அரிய அதனைப் பின் கழற்சிங்கர் கண்டு பூவினை முதலில் எடுத்த தம் அரசியின் கரத்தையும் அரிந்து மலர்களை மலைமகள் கணவன் அணிவதன்முன் முகர்வது தகாதென்பதை இதன்மூலம் காட்டிப் பின் இறையருள் பெற்றனர். நம்பியின் நிகழ்காலத்து வாழ்ந்த கழற்சிங்கருடன் இவர் மேற்கூறிய வரலாற்றால் தொடர்புற்றவர் ஆதலின் இவர் நம்பிகாலத்தவர் ஆவர். நம்பி ஆரூரில் பரவையாருடன் வாழ்ந்த காலத்து இவரும் அங்கிருந்து நம்பியுடன் தொடர்புடன் இருந்திருப்பர்.

(11) **பெருமிழலைக் குறும்பர்** :—நம்பியின் பெருமை முதலியனவற்றை அறிந்து அவர் (நம்பி) அறியாது அவர்பால் பத்திபூண்டு வாழ்ந்து நம்பி திருக்கயிலைச் செல்வதை உணர்ந்து தம் யோகநிலையால் நம்பியுற்ற திருக்கயிலை வாழ்வைப் பெற்றவர்.

(12) **சேரமான் பெருமான்** :—இறைவரை (தம்பிரானை) தோழமையாக்கொண்ட காரணத்தால் தம்பிரான் தோழன் எனப் பெயர்பெற்ற நம்பி, அதனை ஒப்ப இவரை தோழமையாக்கொண்டு சேரமான் தோழர் என்னும் பெயர்பெறக் காரணமாயிருந்தவர் இச்சேரர் கோமான். நம்பியின் பிற்கால வாழ்வில் இணைபிரியாது இருந்து இவ்வடியவர் கயிலை வாழ்விலும் நம்பியைப் பிரியாதிருக்க நம்பி இறைவன் அழைப்பால் வெள்ளையானைமீதூர்ந்து திருக்கயிலைக்குச் சென்[illegible] போது இவர் இறைவன் அழையாதிருப்பவும் நம்பியைப் பிரி[illegible] திருப்ப மனங்கொள்ளா[illegible] தம் குதிரையூர்ந்[illegible] தம் மானிட ஆக்கை[illegible] அடைந்தவர்.

## சமாஜச் செய்திகள்

25—4—54 ஞாயிறன்று மாலை சென்னைக்கடுத்த திரிசூலத்தில் ஈஸ்வரன் கோயிலில் சமாஜத்தின் ஏப்ரல் மாதக் கூட்டம் திரு. ச. சிவகுமாரன், எம். ஏ. அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

திருவாளர்கள், புலவர் — முருகவேள், பி. ஓ. எல்., அச்சுதானந்த சுவாமிகள் ஆகியோர், பெரியபுராணம், வேதாந்தத்தின் சாரம் சித்தாந்தம் என்னும் பொருள்கள் பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள்.

இக்கூட்டத்தை நடத்தித் தந்த பல்லாவரம் மறைமலை அடிகள் மன்றத்தார் சார்பில் திரு. ஏ. எஸ். பாலகிருஷ்ணன் நன்றிகூற கூட்டம் இனிது நிறைவேறிற்று.

28—4—54 மாலை திருநாவுக்கரசு சுவாமிகள் திருவிழா, இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையில் ஷடி சபை, சமாஜம் இவற்றின் ஆதரவில் கொண்டாடப்பெற்றது. சென்னை ஆவணப்பதிவு இலாகா தலைவர் திரு. பு. ஆறுமுக முதலியார், பி. ஏ. அவர்கள் தலைமை வகித்தார்கள்.

திரு. ச. சிவகுமாரன் ஷடி சபையில் வாரவழிபாட்டை பொட்டி நடத்திவந்த சம்பந்தர், சுந்தரர், நாவுக்கரசர் வரலாற்று விரிவுரைகளில், நாவுக்கரசர் பெருமானைப் பற்றிய புராணப் பிரசங்கம் சதய நட்சத்திரம் கூடிய அவ்விழா நாளிலே பூர்த்தியாயிற்று.

திரு. நல். முருகேச முதலியார், பி.ஏ. அவர்களும், திரு. வே. தியாகராய முதலியார் அவர்களும் நாவுக்கரசர் சிறப்பைப் பற்றிப் பேசினார்கள்.

பின்னர் வந்தனை வழிபாட்டோடு கூட்டம் இனிது கலைந்தது.

# சமாஜ அடக்கவிலைப் பதிப்பு விலைப்பட்டி

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| பெரியபுராணம் குறிப்புரையுடன் | .... | 3 | 0 | 0 |
| சங்கநூல் புலவர் அகராதி | .... | 0 | 2 | 6 |
| முருகன் மூந்நூல் | .... | 0 | 3 | 0 |
| திருமுருகாற்றுப்படை உரையுடன் | .... | 0 | 2 | 0 |
| கந்தர் அநுபூதி ,, | .... | 0 | 2 | 0 |
| சிவஞான போதம் தமிழ் முதல் நூலே | .... | 0 | 2 | 0 |
| சிவஸ்தல யாத்திரை மஞ்சரி | .... | 0 | 4 | 0 |
| திருப்போரூர்ச் சந்நிதி முறை | .... | 0 | 12 | 0 |
| சித்தாந்த அஷ்டகம் | ... | 0 | 8 | 0 |
| குகார்ச்சனை திருமந்திரம் | ... | 0 | 1 | 0 |
| தேவாரத்திரட்டு சம்பந்தர் | .... | 0 | 1 | 0 |
| ,, அப்பர் | ... | 0 | 0 | 6 |
| ,, சுந்தரர் | .... | 0 | 0 | 6 |
| திருவாசகத் திரட்டு | ... | 0 | 0 | 6 |
| திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி உரையுடன் | .... | 0 | 0 | 6 |

தபாற்கூலி, ரிஜிஸ்தர் செலவு வேறு.

கிடைக்குமிடங்கள் :—

1. தி. க. சுந்தரம் பிள்ளை,
   18, படேல் ரோடு, பெரம்பூர், சென்னை–11.
2. ம. பாலசுப்பிரமணிய முதலியார்,
   150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை–1.

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street, Royapettah by D. Mangayarkarasi and V. K. Punithavathi. Edited by M. Balasubramanya Mudaliar, B.A., B.L., and Published by S. Satchidanandam Pillai, B.A., L.T., for the Saiva Siddhanta Maha Samajam, 192, Lloyd Road, Royapettah, Madras-14.